பிரிடனுக்கு இந்த உதவியும், நட்புமிருப்பதோடு, இராக், பர்மா, கானடா தேசங்களில் சொந்த எண்ணெய்ப் பிரதேசங்களுமுண்டு. பிரிடிஷ் ஆதீனத்துக்குட்பட்ட தேசங்களுக்குள் இராக் எண்ணெய் ஸ்தலங்கள் மிகப்பெரியவை, உலகப் பிரஸித்திபெற்றது. இங்கு கிர்குக்கு என்பது கிணறுகள் இருக்குமிடம்; ஹைபாவென்பது ஏற்றுமதித்துறைமுகம். கிர்குக்கிலிருந்து எண்ணெயை ஹைபாவுக்குக் கொண்டுபோக 600 மைல் நீளமுள்ள குழாய் போடப்பட்டு இருக்கிறது. சென்ற யுத்தத்தில் இந்த எண்ணெய்ப் பிரதேசத்தை, தனக்கு வேண்டுமென்று பிரான்ஸ் அபேக்ஷித்தது. அதற்காக அதன் தேசமாகிய ஸிரியாவுக்குள் இந்த எண்ணெயில் ஒரு பாகம் வருவதற்கு ஒரு கிளைக் குழாய் ஸிரியாவின் துறைமுகமாகிய திரிபோலிக்குக் கொண்டுவரப்பட்டிருக்கிறது. இப்பொழுது, பிரான்ஸ் பிரிந்துவிட்டதினால் இந்தக் கிளைக்குழாய் மூடப்பட்டு விட்டது.

பிரிடன் ஐச்வர்யம் பெருத்த தேசமாதலால் உலகத்தில் எங்கிருந்தும் வேண்டிய எண்ணெயை வாங்கிக்கொள்ளலாம். பலமான கப்பற்படை இருப்பதால், கடல் மார்க்கமாய் கொண்டுவருவதிலும் சிரமம் ஒன்றுமில்லை. சேர்த்துவைக்கவும் வேண்டாம். அப்போதைக்கப்போது வேண்டிய அளவு வாங்கிக்கொள்ளலாம். பிரிடனுக்கு வேண்டிய எண்ணெய் ஏழுகடல்கள் வழியாகவும் வருகின்றன. இந்திய, அட்லாண்டிக் ஸமுத்திரங்கள் வழியாகவும், ஸூயஸ், பனமா கால்வாய் வழியாகவும், கேப்பைச்சுற்றியும் வருகிறது. உலகத்திலே உற்பத்தியாகும் எண்ணெயில் 100-க்கு 75 பாகம் அமெரிக்காவைச்சேர்ந்தது. அப்பேற்பட்ட அமெரிக்கா, இந்த மகாயுத்தத்தில், பிரிடனுக்குவேண்டியதை அனுப்ப ஆவலோடும், கவலையோடும் தயாராயிருக்கிறது.

ஜெர்மனி.—ஐரோப்பா கண்டத்திலேயே எண்ணெய் விளைவு அதிகமாய்க் கிடையாது. இந்தக் கண்டத்துக்கு இது ஒரு பெரும் குறைவு. ஆகையால் ஜெர்மனிக்கு எண்ணெய் விபத்து அதிகம்தான். சமாதான காலத்தில் அமெரிக்கா, இராக், டச்-ஈஸ்ட்-இண்டீஸ் தேசங்களிலிருந்து வாங்கிவந்த எண்ணெயெல்லாம், இப்பொழுது, பிரிடன் போட்டிருக்கும் முற்றுகையால் நின்றுவிட்டது. ஜெர்மனி ஒரு சிறு பாகம் நிலக்கரியிலிருந்து எண்ணெய் செய்கிறது. பிடித்துக் கொண்ட போலண்டில் சில கிணறுகள் உண்டு. மற்றபடி வேண்டிய எண்ணெய் எல்லாம் ரஷியாவிலிருந்தும், ருமேனியாவிலிருந்தும் வரவேண்டியதுதான்.

ரஷியா.—ரஷிய எண்ணெய் காஸ்பியன் கடல் கரையிலிருக்கும் பாகுவில் எடுக்கப்பட்டு கருங்கடல் துறைமுகமாகிய பாடுமில் ஏற்றுமதியாகிறது. ஏற்கனவே ரஷியாவில் எண்ணெய் உற்பத்தி அதிகம்தான். மேலும் 1932-ல் விளைந்தது 21,400,000 டன்; 1938-ல் 30,100,000 டன்னுக்கு அதிகப்பட்டுவிட்டது. மூன்றும் 5 வருஷ திட்டப்படி 1940-ல் 360 லக்ஷம் டன்னும், 1942-ல் 480 லக்ஷம் டன்னும் எதிர்பார்க்கப்படுகிறது. ஆனால் முடிவில் எவ்வளவு எண்ணெய் எடுபடுமோ தெரியவில்லை: சந்தேகம்தான். அதோடு, ஜெர்மனிக்கு வேண்டிய வரையிலோ, அல்லது சிறிது பாகமோ ரஷியாவால் கொடுக்கமுடியாது. உள்நாட்டு விவசாய யந்திரங்களுக்கும், சைன்யங்கள் உபயோகப்படுத்தும் யந்திர சாதனங்களுக்கும், தன் எண்ணெயெல்லாம் ரஷியா எடுத்துக்கொள்ளுகிறது. இன்னும் ரஷியாவின் பல துறைகளில் முன்னேற்றத்துக்காக உற்பத்தியாகும் எண்ணெயெல்லாம் வேண்டியிருக்கிறது.

ரஷியாவுக்கு தன் எண்ணெயில் ஒரு பாகம் ஜெர்மனிக்குக் கொடுக்க மனம் இருந்தாலும் கொண்டுபோக சாதனங்கள் சரியாயில்லை. ரஷியாவிலிருந்து ஜெர்மனிக்குச் செல்ல மூன்று மார்க்கங்கள்தானுண்டு. ஒன்று பால்டிக் கடல், இரண்டு கருங்கடல் வழியாக, டான்யூப் நதி, மூன்று ரயில்பாதை. பால்டிக் ஒரு கோடியிலும், பாகு எண்ணெய்க் கிணறுகள் மற்றொரு கோடியிலும் பிரிந்து, வெகு தூரத்திலிருப்பதாலும், கடல் அநேக மாதங்களில் உறைந்து போவதாலும், பால்டிக் அனுகூலமாயில்லை. கருங்கடல் மார்க்கம் இப்பொழுது ஜெர்மனிக்கு

நிர்ப்பயமான இடமில்லை. கருங்கடலில் ஓடும் எண்ணெய்க்கப்பல்கள் விசால மானவை. இவைகள் டான்யூப் நதியில் மாட்டிக்கொள்ளும். சிறு கப்பல்களுக்கு மாற்றுவதற்கு வேண்டிய ஸாதனங்கள் கிடையாது. ரயில் பாதையும் கஷ்டம் தான். வெகுதூரம் செல்லவேண்டும். ஜெர்மன் ரயில் பாதை ஒரு அகலம். ரஷிய ரயில்பாதை மற்றொரு அகலம்: இரண்டு ரயில்வேயிலும் எண்ணெய் வண்டிகள் போதுமானதில்லை. சில மாதங்களில் பனியால் போக்கு வரத்து தடைப்படுகிறது. யுத்த காலத்தில் ஏராளமான எண்ணெய் வெகு விரைவாய் கொண்டுபோகவேண்டும். இதற்கு இந்த ரயில் பாதை சிறிதுகூடப் பிரயோ சனமில்லை.

மற்றொரு விஷயமும் இருக்கிறது. ரஷியாவுக்கு ஜெர்மனியிடத்தில் எப் போதும் சந்தேகமும், பயமுமுண்டு. மேலும் இராக், இரான், எண்ணெய்க்கும் பெர்ஷியன் குடாக்கடலில் ஒரு துறைமுகத்திற்கும் ஆசை ரஷியாவுக்கு உண்டு. ஆகையால் இப்பொழுது பிரவேசிக்காவிட்டாலும், இனி யுத்தத்தில் சேர நோக்கங்கொண்டு சொந்த எண்ணெயை ஜெர்மனிக்கு விற்காதிருக்கலாம். மத்திய கிழக்குப்பிரதேசங்களில் ஸூயஸில் வைத்திருக்கும் பிரிடிஷ் துருப்புகள் ரஷிய ஆக்ரமத்துக்கு இடங்கொடுக்கமாட்டார்கள்தான். ஆனாலும் ஆசை யாரை விட்டது?

ருமேனியா.—ஆகவே கார்பேதியன் மலைச்சாரலில், பிளோயஸ்டியில் ஊறும் எண்ணெயைத்தான் ஜெர்மனி பூராவாக நம்பியிருக்கிறது. இந்த எண்ணெய்-நில யங்கள் ருமேனிய கவர்ன்மெண்டு ஆதீனத்திலிருந்தாலும், அங்கிருக்கும் ஆஸ்திரா ரோமேனு (455,640 டன்கள்), ஸ்டியூவா ரொமேனு (270,274 டன்கள்) கம்பெ னிகள் அயல்நாட்டாரைச் சேர்ந்தது. இவைகளில், 100-க்கு 23 பங்கு பிரிடன் முதல் போட்டிருக்கிறது.

ஜெர்மனிக்கு ருமேனிய எண்ணெய் விற்கவேண்டுமென்று உடன்படிக்கைகள் இருப்பது உண்மையே. ஆனால், ருமேனியாவில் எண்ணெய் உற்பத்தி சமீபத்தில் 165 லக்ஷம் டன்னிலிருந்து 135 லக்ஷம் டன்னுக்குக் குறைந்துவிட்டது. அதோடு 'கரோல்' அகழி வெட்டியதிலிருந்து உள்நாட்டுத் தேவையும் அதிகமாய்விட் டது. வெளிநாட்டுக் கம்பெனிக்காரர்களுக்கும், பிரான்ஸ், இதாலி, ஹங்கேரி, கிரீஸ், எகிப்து முதலான வழக்கமாய் வாங்கிக்கொள்ளுகிறவர்களுக்கும் கொடுத் தாகவேணும். அங்குள்ள எண்ணெய்க்கப்பல்களில் பாதி அயல்நாட்டுக் கம்பெனி களைச்சேர்ந்தது. டான்யூப் நதிக்கரையில் சேர்த்துவைக்க எண்ணெய்க்கிட்டங்கி கள் குறைவு. எண்ணெய்க்கப்பல்கள் பெரியவைகளாதலாலும், பாரமதிகமானதி னாலும், மெள்ளத்தான் செல்லும். மாரிகாலத்தில் சில மாதங்களுக்கு டான்யூப் பில் போக்குவரத்து நின்றுவிடும். ஜெர்மனிக்கு ரயில் எண்ணெய்வண்டிகள் வெகு சில. பிறரிடம் இரவல் வாங்கிக்கொள்ளும் வண்டிகளைத் திருப்பிக்கொடுப்பதும் இல்லை. ஒருசமயம் இந்தமாதிரி அட்மிரல் ஹார்தி கொடுத்துவிட்டு நஷ்டப் பட்டதுண்டு.

சமீபத்தில் பொய்க்குற்றம் சாட்டி ருமேனியாவிலிருந்த பிரிடிஷ் மக்களை, ஜெர்மனி துன்பப்படுத்திக் கைதுசெய்ததெல்லாம் இந்த எண்ணெய்க்காகத்தான், 'வியென்ன உடன்படிக்கை', கரோலை விரட்டியது, நாஸிப்படைகள் மெள்ள மெள்ள ருமேனியாவுக்குள் நுழைந்து தேசத்தைப் பிடித்துக்கொண்டது, எண்ணெய்க் கிணறுகளை பந்தோபஸ்து செய்ய, கிலபீரங்கிகளை அவஸர அவஸரமாக வைத்ததெல்லாம் இந்த எண்ணெய்க்காகத்தான். கதைகளில் லாங்ஜான் ஸில்வர் என்பவன் புதையலெடுக்கப்போன வெறியைக் காட்டிலும் அதிக வெறிபிடித்து ஜெர்மனி எண்ணெய்க்கு அலைகிறது.

இப்பொழுது ஜெர்மனிக்கு வருஷத்துக்குத் தேவையான எண்ணெயும். கிடைக்கக்கூடிய அளவும் கீழே காணலாம் ;—

A. தேவை.

(1) சமாதானகாலத்தில்.

	டன்கள்.
ஹிட்லர் பிடித்திருக்கும் ஜெர்மன் தேசம் ...	8,000,000
பிரான்ஸ்	7,000,000
இதாலி	3,500,000
ருமேனியா	1,900,000
ஹாலண்டு	1,600,000
டென்மார்க்	900,000
பெல்ஜியம்	700,000
பலவகைத் தேவை	1,200,000
	24,800,000

(2) யுத்தகாலத்தில்—யுத்தத்துக்கு.

இது யுத்தம் நடக்கும் விதத்தைப்பொறுத்தது. வருஷத்தில் 100 லக்ஷம் டன்னிலிருந்து 2000 லக்ஷம்வரையில் தேவையிருக்கலாம்	12,000,000
மொத்தம் ...	36,800,000

B. கிடைப்பது.

	டன்கள்.
(1) ருமேனியா	6,000,000
(2) நிலக்கரியிலிருந்து உள்நாட்டு உற்பத்தி ...	5,000,000
(3) பிரான்ஸ் முதலான இடங்களிலிருந்து ...	1,000,000
	12,000,000

ஆகவே, சமாதான காலத்தில் 24,800,000 டன்னும், யுத்தத்துக்கு 12,000,000 டன்னும் வேண்டியிருக்க ஜெர்மனிக்குக் கிடைப்பது 12,000,000 டன் தான்.

1. மேல் கொடுத்திருக்கும் கணக்கில், ருமேனியா தன் எண்ணெயின் முழுபாகத்தைக்கொடுத்து விடுவதாகவும், வழக்கம்போல் அதிக எண்ணெய் ருமேனியாவில் விளைவதாயும் ஜெர்மனிக்குச் சாதகமாய் மதிப்பிடப்பட்டிருக்கிறது.

2. பிரான்ஸ் முதலிய தேசங்களைப் பிடித்துக்கொண்டதிலிருந்து ஜெர்மனிக்கு எண்ணெய்ச் செலவு அதிகமாய் விட்டது.

3. உள் நாட்டில் செய்யப்படும் எண்ணெய் இரண்டு வாரச்சண்டைக்குக் கூடப்போதாதது.

ஜெர்மனி இந்த எண்ணெய்ப் பஞ்சத்துக்கு என்ன செய்யும்? ஒன்று, ஏற்கனவே, சமாதான காலங்களில் எண்ணெயைச் சேர்த்து வைத்திருக்கலாம். மற்றொன்று, பொதுஜனங்கள் உபயோகிக்கும் எண்ணெயில் ஒரு பாகம் மிச்சப்படுத்தலாம்.

சமாதானகாலத்தில், ஜெர்மனி உற்பத்தி செய்த எண்ணெயும் வாங்கிய எண்ணெயும் 8,250,000 டன்னென்று கணக்கிடலாம். சண்டையை முன்னிட்டு, 1937, 1938-ல் அதிக எண்ணெயை மீதப்படுத்தியிருக்கவேண்டும். ஆனால் ஆஸ்திரியா முதற் கொண்டு, பிரான்ஸ் வரையில் நடந்த யுத்தங்களால் சேர்த்து வைத்த எண்ணெய் குறைந்திருக்கவேண்டும்.

ஜெர்மனி கைவசப்படுத்திக் கொண்டிருக்கும் பிரான்ஸ் முதலிய நாடுகளில் இருந்த எண்ணெயை இப்பொழுது அபகரித்துக் கொள்ளலாமென்பது உண்மையே. ஆனால் இதில் அதிகமாய்க் கிடைக்காது. உதாரணமாக, டென்மார்க்குக்கு வருஷத்துக்கு 200,000 டன் வேண்டும். இதை யெல்லாம் எடுத்துக்கொண்டாலும், ஒரு வாரச்சண்டைக்குக்காணாது. நார்வேயிலும், ஹாலண்டிலும், கையிலிருந்த எண்ணெயை எல்லாம், ஜெர்மானியர் படையெடுத்து எடுத்துக்கொள்ளுவதற்குள் கொளுத்தி விட்டார்கள்.

உள் நாட்டுப் பொதுஜன உபயோகத்துக்கு வைத்திருக்கும் எண்ணெயில் செட்டு செய்வது மற்றொரு உபாயமாகும். ஆனால் இவ்விதம் மூன்றில் ஒரு பங்கு மிச்சப்படுத்தினாலும் ஒரு மாதச்சண்டைக்குக்காணாது.

இந்தச் செட்டெல்லாம் கடைத்தேருது. ஜெர்மனி என்ன செய்யப்போகிறது?

1. ரஷியாவிலிருந்து கிடைக்காது. ஏனென்றால், விற்க எண்ணெயுமில்லை; தாமதமாய்த்தான் கிடைக்கும்.

2. ருமேனியாவிலிருந்தும் வேண்டிய அளவு கிடைக்காது. அங்கே, உற்பத்தியே, குறைந்து விட்டது.

3. சொந்த உற்பத்திச் சாலைகளிலிருந்து கிடைப்பதற்கில்லை. பிரிடிஷ் விமானங்கள் அவைகளைத் தகர்க்கின்றன.

4. இராக்கில் 40 லக்ஷம் டன் எடுக்கப்படுகிறது, பிரேதன் கவர்ன்மெண்டும், ஸிரியா கவர்ன்மெண்டும் இஷ்டப்பட்டாலும் இது கிடைக்காது. இரானில் 100 லக்ஷம் டன் கிடைக்கிறது. அதில் ஒரு சொட்டுக்கூட வராது. பிரிடிஷ் யுத்தக்கப்பல்கள் தடுத்துவிடும்.

5. டார்டனெல்ஸ் பாதையாகவும் ரஷிய எண்ணெய் வரமுடியாது. அங்கே துருக்கி காவல் காத்துக்கொண்டிருக்கிறது.

6. ஸ்பெயின் அதிகாரிகளோடு கூடிக்கூடிப் பேசினாலும் ஸ்பெயின் வழியாயும் வராது. ஏனென்றால் பிரிடிஷ் கப்பல் சீட்டு இல்லாது எண்ணெய் ஸ்பெயினுக்குள் வரமுடியாது.

7. அமெரிக்காவிலிருந்து கிடைக்காது. அமெரிக்கா விற்காது.

8. டச்-ஈஸ்ட்-இண்டீஸிலிருந்தும் வராது. ஏனென்றால் பிரிடன் முற்றுகை போட்டுவிட்டது.

சேர்த்துவைத்த எண்ணெய் எத்தனை நாள்தான் காணும்? கொஞ்ச காலத்துக்குள் எண்ணெய்த் தொட்டிகளைச் சுரண்டி வரண்டவேண்டியதுதான். சென்ற யுத்தத்தில் 1917-ல் நடந்தபடி எண்ணெய்ப் பஞ்சம் ஏற்பட்டு, சரணாகதி அடையவேண்டியதுதான்.

இந்த யுத்தம் எண்ணெயைப்பொறுத்தது. எண்ணெய் ஒரு பொருள் பெற்ற சரக்காயிருப்பதோடு, யுத்தத்தை நடத்த ஒரு முக்கிய கருவியாயுமிருக்கிறது. எண்ணெய் வரத்தை நிறுத்திவிட்டால், சண்டையில்லாமலே, நிச்சயமாய் நாஸிகளை வென்றுவிடலாம். ஜெர்மனியின் எண்ணெய் சாலைகளிலும், கிடங்குகளிலும் பிரிடிஷ் விமானிகள் போட்டுவரும் ஒவ்வொரு வெடியும் ஜெர்மனியின் பலத்தைக் குறைத்துவருகிறது. அப்பேற்பட்ட சமயம் சீக்கிரம் ஏற்படப் பிரார்த்திப்போம். ருமேனியாவில் இப்பொழுது பூகம்பங்கள் ஏற்பட்டுக்கொண்டிருக்கின்றன. அங்கிருக்கும் நிரபராதியான ஜனங்களைக் கொல்லாது, பக்கத்திலிருக்கும் எண்ணெய்க் கிணறுகளைப் பூகம்பம் இடித்துவிட்டால் ஜெர்மனியின் கொட்டமெல்லாம் உடனே அடங்கிவிடும்.

வார யுத்தச் செய்திகள்.

(7—11—40 லிருந்து 14—11—40 வரை).

மிஸ்டர் சர்ச்சிலின் யுத்த விமர்சனம்.

நவம்பர் 5-ல் காமன்ஸ்சபையில் பிரிடிஷ் பிரதம மந்திரி யுத்த-விமர்சனம் செய்து பேசியதிலிருந்து சில பாகங்கள் கீழே மொழிபெயர்க்கப் பட்டிருக்கின்றன. இதைப்பற்றிய கட்டுரையொன்று "மிஸ்டர் சர்ச்சிலின் அழுத்தமான பேச்சுகள்" என்ற தலைப்பெயரின்கீழ் மற்ருெரு பக்கத்தில் பார்க்கலாம் :—

"செப்டம்பர் 4-ம் தேதியன்று ஹிட்லர், நாம் கீழ்படியாவிட்டால் நம்முடைய ஊர்களைச் சுட்டுக் கொளுத்திவிடுவதாகச் சொன்னார்". தன்னால் முடியுமென்று நினைத்தாரென்பதற்கும் சந்தேகமுமில்லை.

ஆனால், அவர் நினைத்தபடி நம்முடைய நகரங்கள் இடிபடவில்லை; ஸ்திரமாய் நிலவெளியில் நிற்பதோடு, நகரவாஸிகள் தங்களுள் முழு ஊக்கத்தோடு தங்கள் வேலைகளைப் பார்த்துவருகிறார்கள்.

இதுவரையில் விமான எதிர்ப்பால் இறந்த பொதுஜனங்கள் 14,000, காயமடைந்தவர்கள் 20,000, இவர்களில் 5-ல் 4-பேர்கள் லண்டன்வாஸிகள். சிப்பாய்களில் இறந்தது 300-பேர்கள்தான், காயமடைந்தவர்கள் 500" இதுதான் ஹிட்லரின் ராணுவங்களைத் தாக்கும் யுத்தம்.

வீடுகள் பல பழுதாய்விட்டது வாஸ்தவம்தான். ஆனால், இன்ஷியூரன்ஸால் அதை ஈடு செய்துவிடலாம். அபாய அறிவிப்பால் சற்றுநேரம் வேலை நிறுத்தம் ஏற்பட்டதைத் தவிர விமானங்கள், யுத்த தளவாடங்கள் உற்பத்திக்குத் தடையொன்றுமில்லை. இதை இப்பொழுது ஈடுசெய்யவேண்டும்.

சிலதினங்களுக்குமுன், ஒரு இரவு நான் சுற்றிப்பார்க்க வெளியே போனபோது தலைக்கவசமணிந்த சிலர்கள் ஒரு வாயிற்படியில் நின்றுகொண்டு பேசுவதைப் பார்த்து, எதைப்பற்றிப் பேசிக்கொண்டிருக்கிறார்கள் என்று கேட்டேன். ஆழ்ந்த தடித்த குரலோடு ஒருவன், 'விட்டுவிடாது நடத்திக்கொண்டுபோனால் நம் செய்கை உன்னதமாகும்' என்றான்.

இந்த மாரிகாலத்துக்கு இந்த வார்த்தைகளை நம் நோக்கமாகக் கொள்ள வேண்டும். அடுத்த மாரிகாலம் வரும்போது, அதற்குத் தகுந்த யோசனைகள் செய்வோம்.

எதிரியானவன், தன் முழுபலத்தோடு நம்மை எதிர்த்துப்பார்த்தானென்பதற்குச் சந்தேகமில்லை. ஹிட்லர் உத்திரவுப்படி அவர் விமானிகளும் சண்டை செய்துதான் பார்த்தார்கள். ஆனால், வரவர எதிர்ப்பு அசந்துவிட்டது.

செப்டம்பர் முதல்வார எதிர்ப்பில் 6,000-பேர்கள் சேதம். அக்டோபர் கடைசிவாரத்தில் சேதம் 2,000-பேர்கள்தான்.

விமான அபாயத்தைக்காட்டிலும் அட்லாண்டிக் சமுத்திரத்தில் நீர்மூழ்கிகளால் ஏற்படும் விபத்து அதிகமாகவிருக்கிறது. நம்முடைய கப்பல்கள், விமானங்கள் எண்ணெய், கரி எடுத்துக்கொள்ள அயர்லாந்து இடம் கொடுக்க மறுப்பது விசனிக்கத்தக்கது. நம்முடைய க்ஷேமத்துக்கும், அயர்லாந்தின் க்ஷேமத்துக்கும் கடல் வியாபாரப் போக்குவரத்து நிற்கக்கூடாது. இந்த சிரமமான வேளையில் எதையும் தாங்கிக்கொள்ள நமக்கு முடியுமென்றாலும் அயர்லாந்து இப்படிச்செய்வது அழகல்ல.

இங்கிலாந்தைப் படையெடுப்பதாகச் சொல்லிக்கொண்டிருக்கும் அபாயகரமான இச்சமயத்திலும் கப்பல்கள் ஏற்றிப்போகுமளவுக்கு சைன்யங்களை அனுப்பி, நம்முடைய உள்நாட்டுச் சைன்யங்கள் வைத்திருக்கும் அத்தியாவச்யமான அருமையான யந்திர-தளவாடங்களையும் அனுப்பியிருக்கிறோம்.

ஜெர்மனியால் தோற்கப்பட்டு, இதாலியின் சூழ்ச்சிக்குள் பிரான்ஸ் அகப்பட்டுக்கொண்டதிலிருந்து, ஸிரியா, டியூனிஸ், அல்கீரியா, மொராகோவில் இருந்த பிரஞ்சுத் துருப்புகளும், பிரஞ்சு கப்பற்படையும், ராணுவ நிலயங்களும் நமக்கில்லாதுபோய்விட்டன.

இந்தப்பெரிய நஷ்டத்துக்கு நிவர்த்தியே இல்லாதுபோயிருக்கும்.

லிபியாவில் வைத்திருந்த இதாலிய சைன்யம் பிரிடிஷ் சைன்யத்துக்கு அதிகமாய் நைல்-தீரத்தையும், ஸூயஸ் கால்வாயையும் அடித்துக்கொண்டுபோய் விடும்போலிருந்தது.

ஆனால், அங்கே வைத்திருக்கும் நம்முடைய சைன்யங்கள் இப்போது வலுத்துவிட்டன.

இவைகளோடு இப்பொழுது, மற்றொரு புதுக்காரியம் ஒன்று ஏற்பட்டிருக்கிறது. எம். லவால், ஹிட்லரோடு கிராம்ய-லாலனத்தைச் செய்வதைப் பார்த்து சகியாமலோ, அல்லது கொள்ளை நோக்கத்தோடோ, இரக்கமின்றி, சிறுதேசமாகிய கிரீஸை முஸலோனி படையெடுத்திருக்கிறார்.

கண்யமாய் ஜீவிக்க விரும்பி, கிரேக்க அரசரும், மந்திரியும், பிரஜைகளும் சண்டையிலிறங்கிவிட்டார்கள்.

இங்கிலீஷ் கால்வாய்க்கு அக்கரையில் நம்மை எதிர்க்க ஒரு சைன்யம் நிற்கிறது. இதைக்காட்டிலும் பெரிய மற்றொரு சைன்யம் லிபியா பாலைவனத்தில் நிற்கிறது. இவைகளை நன்றாய் நிதானித்துக் காரியங்களை நடத்தவேண்டும்.

நாம் இந்த இக்கட்டில் செய்யக்கூடியது ஒன்றுதான். நம்மால் முடிந்த வரையில் சண்டைசெய்து பார்த்துவிடுவோம்."

ஹிட்லரின் பிரஸங்கம்.

1923-ல் ஸ்தாபிக்கப்பட்ட நாஸி இயக்கத்தின் வருஷாந்திரக் கொண்டாட்டம் லோவன்பிராவில் நடக்கும்போது ஹிட்லர் பேசப்போவதாகப் பிரசுரிக்கப்பட்டது. ஆனால், மறுநாள் காலைவரையில் பேச்சு வெளிவரவில்லை. ரேடியோ நிலயங்கள் முன்னிரவில் மூடப்படுவதாலும், பிரஸங்கம் ரிகார்டு செய்வதில் ஏதோ பிசகேற்பட்டதாலும் ஹிட்லர் பிரஸங்கம் குறிப்பிட்டகாலத்தில் ஒலி பரப்பப்படவில்லையென்று சொல்லப்பட்டது. ஆனால், உண்மை வேறாயிருக்கலாம். இந்தக் கொண்டாட்டக்காலத்தை எப்படியோ தெரிந்துகொண்டு ஹிட்லருக்கும் அவருடைய சகாக்களுக்கும் புத்தி கற்பிக்க அன்று இரவு அனுகூலமாய் இருக்க பிரிடிஷ் விமானிகள் 600 மைல் பறந்து கொண்டாட்டம் நடக்கும் முயூனிக்குக்குச் சரியாக இரவு 8 மணிக்கு, பிரஸங்கம் நடக்கும் சமயத்துக்கு வந்து கொண்டாட்ட மாளிகைக்குச் சமீபத்திலுள்ள ரயில்வேஸ்டேஷனில் குண்டுகளை வீச, அவைகளில் ஒன்று பக்கத்திலிருந்த சாராயக்கிடங்குக் கட்டடத்தில் விழுந்து நெருப்புப்பிடித்துக்கொண்டது. இதைக்கண்டு பயந்து ஹிட்லர் இரும்புக்கவசம்போட்ட வண்டியில் ஏற வண்டி பூமிக்குள் சுரங்கவழிக்குள் தள்ளப்பட்டிருக்கலாம்.

மிஸ்டர் சேம்பர்லின் காலஞ்சென்றார்.

ஹிட்லர் அட்டூழியம் செய்தும் ஐரோப்பாவில் சமாதானத்தை நிலைநாட்ட பகிரதப் பிரயத்தினம் செய்த மகானுபாவரிவர். முயற்சி பயன்படாது போனாலும் இவரால் ஒரு வருஷத்துக்குச் சண்டையை ஒதுக்கிவைக்க முடிந்தது. பிரிடனுக்கும் யுத்த முஸ்தீப்புகள் தயாரிக்க ஒரு வருஷகாலம் வாய்த்தது. மிஸ்டர் சர்ச்சில் சொன்னபடி "நாமொன்று நினைக்க, அதற்கு விரோதமாய் உலகம் புரளும் காலத்தில் வசித்ததால் மிஸ்டர் சேம்பர்லின் கொண்ட ஆசைகள் வீணாய்ப் போயின. அப்படியானாலும் அவர் மனிதனுக்கு இருக்கவேண்டிய சிலாக்கியமான, பரோபகாரமான தர்மங்களைச் சலிக்காது அப்பியசித்தார். சமாதானம், சமாதானத்துக்காக உழைத்தல், சமாதானத்தை நாடுதல் இவைகளையே அவர் தன்னுடைய முக்கிய தர்மங்களாகக் கொண்டார்.

"இப்படி யிருக்க ஹிட்லர் சமாதானத்துக்காகத்தான் பாடுபடுவதாகப் பேத்துகிறார். மிஸ்டர் சேம்பர்லின் சவக்குழியில் மனதைச் செலுத்தி, சமாதான மூர்த்தியான அவரை நினைத்து மௌனமாயிருப்பதுதான் இந்தச் சமயத்துக்குச் சரியாகும்."

எம். மோலாடாவின் வருகை.

32-உத்தியோகஸ்தர்கள் புடைசூழ, ரஷிய அயல் நாட்டு மந்திரி பெர்லினுக்கு வந்தார். இதில் ஒரு விசேஷத்தையும் காணோம். ஒரு சமயம் அமெரிக்காவுக்கும், பிரிடனுக்கும் ஏற்பட்டிருக்கிற மாதிரி வியாபார உடன்படிக்கைப் பேச்சுகள் நடந்திருக்கலாம். இதை ஜெர்மன் பத்திரிகைகள் 'உலகத்தில் ஏற்படாத

ஆச்சரியமென்றும், ராஜீயதந்திர-வெற்றியென்றும்' பிரமாதப்படுத்திக்கொள்ளுகின்றன. பெர்லினில் அலங்காரங்கள் பலமாயிருக்கின்றன. பிரிடிஷ் விமானங்கள் போய் கெடுக்காமலிருக்கவேண்டும்.

கிரீஸ்.—டேவிட் என்ற சிறுவனுக்கும் கோலியாத் அரக்கனுக்கும் முற்காலத்தில் நடந்த சண்டையைப்போல் இப்பொழுது கிரீஸாகிய சிறு தேசத்துக்கும் இதாலிக்கும் யுத்தம் நடக்கிறது. கிரேக்க துருப்புகளின் சாமர்த்தியத்தால் கோரிட்ஸாவில் இதாலியருக்கு நெருக்கடி ஏற்பட்டுவிட்டது. பிண்டஸ் பார்சத்தில் இதாலிய துருப்புகள் சின்னாபின்னமாய் அலைப் பிரவாகத்தில் அநேகர் முழுகி, குளிராலும் பசியாலும் உயிர் நீத்து, மலங்காடுகளிலுள்ள ஓனாய்க்கும் கரடிகளுக்கும் இரையானார்கள். 2,000 பேர்கள்போல் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். கிரேக்கிய விமானப்படையும், சிறியதாயிருந்தாலும், பிரிடிஷ் விமானப்படையின் உதவியைக்கொண்டு ஒன்றுக்கு ஒன்பதாக எதிரியை த்வம்ஸம் செய்து பெரும் கீர்த்தியை அடைந்து விட்டது.

மிதிலீனி, கியாஸ், கிதேரா இடங்களுக்கு பிரிடிஷ் துருப்புகள் வந்துவிட்டன. கிரீடில் இறங்கியிருக்கும் சைன்யங்களால் டாடிகானீஸ் தீவுகளுக்குப் போக்குவரத்து நின்றுபோய்விட்டது.

பிரிண்டிஸியிலும், பாரியிலும் இதாலியத் துருப்புகள் ஆல்பேனியாவுக்குப் போகத் தயாராயிருக்கின்றன. இந்த இடங்களிலும், பீரியூஸ்மிலான், டியூரின், ஒட்ராண்டோ, டாரண்டோ, பிரிண்டிஸி இடங்களிலும் பிரிடிஷ் விமானங்கள் படையெடுத்தன. ஸார்டீனியாவிலுள்ள காக்லியாரி யென்ற விமானக்-கப்பல் நிலயத்தில் குண்டுகள் வீசப்பட்டன.

கிரீஸின் மேற்குக்-கரையெல்லாம் பிரிடிஷ் கப்பல்கள் பாராக்கொடுக்கின்றன. ஒரு இதாலியக் கப்பலாவது அங்குகாணோம்.

மஸோவாவில் நடந்த ஒரு சம்பவத்திலிருந்து இதாலியின் மூடத்தனம் வெளிப்படுகிறது. இதாலியத் துருப்புகள் அங்கிருப்பதாக நினைத்துக்கொண்டு இதாலிய விமானங்கள் மாவையும், கால்நடை-தீனியையும் கொண்டுபோய்ப் போட்டன. இதாலியர்கள் அந்த ஊரைவிட்டு ஏற்கனவே ஓடிவிட்டதால் இவைகளை கிரேக்கியர்கள் எடுத்துக் கொண்டுவிட்டார்கள்.

ஆல்பேனியத் துருப்புகள் பின்புறத்தில் கலகம் செய்வதால் இதாலியருக்கு முழுச் சைன்யத்தையும் கிரீஸுக்கனுப்பமுடியவில்லை. ஸாடன் என்ற புது சேனாதிபதியை இதாலி அனுப்பியதிலிருந்து ஏற்கனவே நடந்த சண்டையில் இதாலி தோற்றிருப்பது வெளியாகிறது. தங்களுக்கு முடியவில்லையென்று ஜெர்மனியின் உதவியை இதாலியர்கள் நாடுவதாகவும் பிரஸ்தாபம்.

பிரியூஸ், பாலிரான் குடாக்கடல், வோலோ (பாதுகாப்பில்லாத ஊர்) லாரிஸ்ஸா, பாட்ராஸ், ஆதன்ஸ், காரின்த் முதலிய ஸ்தலங்களை இதாலி விமானங்கள் எதிர்த்தன.

வட ஆபிரிக்கா.—தென் ஆபிரிக்கா விமானங்களால் 8-ம் தடவை நெகல்லி தாக்கப்பட்டது. கஸாலாவைச் சுற்றி பிரிடிஷ் படைகள் பாராக்கொடுக்கின்றன. பார்டியா, மாடலினா, கார்ன்-எல்-கிரேன், ஸிவா-ஓயஸிஸ் முதலிய இடங்களை பிரிடிஷ் விமானங்கள் தாக்கின. ஒரு பிரிடிஷ் படையும் சில விமானங்களும் சேர்ந்துகொண்டு, திடீரென்று எதிர்த்து முக்கால் மணிநேரத்துக்குள், அபிஸீனியாவுக்கும், ஸுடானுக்கும் பொதுஎல்லையிலிருக்கும் முக்கிய ஸ்தலமாகிய கலாபாட்டைப் பிடித்துக்கொண்டன. இதில் இந்தியத் துருப்புகள் போர் செய்து கீர்த்தி பெற்றன. இந்த ஊரைத் திருப்பிப்பிடிக்க பலத்த பிரயத்தினங்கள் நடந்தாலும், இன்னும் ஊர் பிரிடன் கையில்தானிருக்கிறது.

பிரேஞ்சு-ஈக்வடோரியல்-ஆபிரிக்கா.—இதுவரையில் விஷிக்கு அடங்கி இருந்த லாம்பரீன் நகரத்தார்கள் இப்பொழுது ஜெனரல் டீகாலுக்குச் சரணாகதி செய்துவிட்டார்கள். காபோன்-காலனியின் தலைநகரான லிபரவில்லேக்கும், பிரிடிஷ்-கப்பல்-படை உதவியைக்கொண்டு டீ-கால் வந்துவிட்டார். விஷி கவர்ன்மெண்டு சொல்லுகிறபடி, அந்தச் சமயத்தில் பிரிடிஷ் கப்பல்கள் சண்டையொன்றும் செய்யவில்லை. டீ-காலின் கப்பல்கள் இரண்டு (ஸாவ்ரோனான்-டி-பிராஸா, கம்மண்டான்டடாமினி) லிப்ரெவில்லேக்கு வந்தபோது விஷி நீர்மூழ்கி ஒன்று (பான்ஸலே) பிரிடிஷ் யுத்தக்கப்பல் ஒன்றை மூழ்க்கப்பார்த்தது. அதற்குத் திருப்பி நடவடிக்கை எடுத்துக் கொண்டபோது இந்த நீர்மூழ்கி தானாகவே வெளிக்கிளம்பித் தன்னையேதான் உடைத்துக்கொண்டது. சண்டை ஒன்றும் நடக்கவில்லை.

லிபிரெவில்லே பிடிபட்டதிலிருந்து பிரெஞ்சு-ஈக்வடோரியல்-ஆபிரிக்கா முழுவதும் ஜெனரல் டீ-காலுக்கு சுவாதீனமாய் விட்டது.

யூகோ-ஸ்லாவியா.—செவ்வாய்க்கிழமையன்று மொனாஸ்டீர் நகரத்துக்கு 10 அயல்நாட்டு விமானங்கள் வந்து குண்டுகளைப் போட்டு, 9 பேர்கள் இறந்து, 21 பேர்கள் காயப்பட்டார்கள். விமானங்கள் எந்த நாட்டைச் சேர்ந்தனவென்று கண்டுபிடிக்க நிபுணர்கள், வெடிகள் விழுந்த ஸ்தலத்துக்கு அனுப்பப்பட்டிருக்கிறார்கள்.

அச்சுநாடுகளுக்கு விரோதியாயிருந்த ஜெனரல் நெடிச் வேலையிலிருந்து நிறுத்தப்பட்டார். அச்சுநாடுகளைச் சமாதானப்படுத்த இவ்விதம் செய்து இருக்கலாம்.

ருமேனியா.—5 நிமிஷநேரம் பூகம்பம் ஏற்பட்டு ருமேனியாவில் பலத்த சேதம் உண்டாய்விட்டது. இன்னும் பூகம்பம் உண்டாய்க்கொண்டிருக்கிறது. அரண்மனை, அமெரிக்க-தூதர் மாளிகை, ஆயிரக்கணக்கான வீடுகள் சேதம்.

ஆகாயத்தை அளாவியிருந்த கார்ல்டன்-கட்டடம் இடிந்துவிழுந்து 200 பேர்கள் புதைபட்டார்கள். சில எண்ணெய் ஸ்தலங்கள் பழுதாயின.

தூர-கீழ்-பிரதேசம்.—மடாங்கைப் பிடித்துக்கொண்டு, யாங்சோவையும், இசாங்கையும் சீனர்கள் தாக்குகிறார்கள். நான்ட்ஸென்க்வானிலிருந்து ஜப்பானியரை விரட்டி விட்டார்கள். ஒரு ஜப்பானிய யுத்தக்கப்பலை நவம்பர் 7லும் ஒரு வியாபாரக்கப்பலை நவம்பர் 9லும் மூழ்கடித்துவிட்டார்கள்.

அமெரிக்கா.—பிரிடனுக்குச் செய்யும் உதவியை அதிகப்படுத்த பிரஸிடெண்ட் ரூஸ்வெல்ட் ஏற்பாடு செய்துகொண்டிருக்கிறார். நடுநிலை வகித்தல் கடன் கொடுத்தல் இவைகளின் சம்பந்தமான சட்டங்களை பிரிடனுக்கு அனுகூலப்படும்படிமாற்றவும், விஷி அரசாங்கத்தை அங்கீகரிக்காமலிருக்கவும், ஜெர்மனி பிடித்த நாடுகளுக்கு ஹூவர்திட்டப்படி ஆகாராதிகள் போகாது தடுக்கவும் யோசனைசெய்ய ஜனங்களைக்கலந்து கொள்ளப்போகிறார். இனி யுனைடெட்-ஸ்டேட்ஸில் உற்பத்தியாகும் யுத்த—தளவாடங்களில் பாதி பிரிடனுக்குக் கொடுக்கப்படும். மேலும் 12,000 விமானங்களை அமெரிக்காவில் வாங்கப் பிரிடன் அனுமதிக்கப்படும்.

ஆகாயப்-போர்.—இந்த வாரத்திய விமானப்-போரின் ஜாபிதா இறுதியில் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆர்மிஸ்டிஸ் தினத்தன்று 730 மைல் கடந்து டான்ஸிக் முதலிய பல இடங்களை பிரிடிஷ்—விமானங்கள் தாக்கி வந்தன. இந்த வாரத்தில் லண்டன் டவரும், ஸெயிண்ட் கிளெமென்ட்—டேன்ஸ் என்ற கேர்த்தியான கோவிலும் லண்டனில் பழுதாயின.

நவம்பர் 8-ம் தேதி காலையோடு முடிந்த ஒரு வாரத்தில், ஜெர்மனியிலுள்ள 28 துறைமுகங்களையும், 10 எண்ணெய்-சாலைகளையும், 14 ரெயில்-ஸ்டேஷன்களையும், 14 தொழிற்சாலைகளையும், அநேக விமான நிலயங்களையும் பிரிடிஷ்-விமானங்கள் தாக்கின.

கடல்-எதிர்ப்புகள்.—கொஞ்ச நாளாக, அட்லான்டிக் ஸமுத்திரத்தில் நீர்மூழ்கி அபாயம் அதிகப்பட்டுக் கொண்டுவருகிறது. இதோடு விமான எதிர்ப்பும் சேருகிறது. ஸில்லித் தீவுக்கு 80 மைலுக்கப்பால் பிரிடானி நிலயங்களிலிருந்து புறப்பட்டு, எயரியின் தென்-மேற்கு கோடியில் திசைபார்த்து இந்த நீர்மூழ்கிகள் போவதாகத் தெரிகிறது. பிரிடனுடைய கப்பல்களும், விமானங்களும் எண்ணெய், கரி முதலியவைகளை எடுத்துப்போக நிலயங்களை அயர்லாந்தில் கொடுக்க மறுப்பது அக்கிரமம்.

பிரிடிஷ் கப்பல் ஒன்றும், ஸிடி-அப்-ரேவில்லே என்ற அமெரிக்கா கப்பல் ஒன்றும், கடல் வெடிகள்பட்டு, ஆஸ்திரேலியாவுக்கருகில் மூழ்கின.

தேதி. பிரிடிஷ், கிரேக்க விமானப் படையெடுப்புகளின் விவரங்கள்.	பிரிடிஷ், கிரேக்க விமான நஷ்டம்.	எதிரிகளின் விமான நஷ்டமும்; விமான படையெடுப்புகளால் விளைந்த சேதமும்.
3—11—40 (ஞாயிற்றுக்கிழமை).		
ஜெர்மனி, ஜெர்மனி ஐரோப்பாவில் ஆக்ரமித்திருக்கும் நாடுகள்.		
பகலில்.—துறைமுகம் ப்ளஷிங் (Flushing) விமான நிலயம்.—ஸோயஸ்டர்பக் (Soesterberg).	......	சேதமாயிற்று.
இரவில்.—கப்பற்படை நிற்குமிடங்கள் கீல் (Kiel).	2 விமானங்கள்.	பெருந்தீ சூழ்ந்தது.
இதாலி (Italy).		
முக்கியமான ரயில்வே ஸ்டேஷன்.—நேபிள்ஸ் (Naples).	......	பலத்த சேதம்.
எண்ணெய்த் தொட்டிகள்.—நேபிள்ஸ் (Naples)-க்கு தெற்கே இருக்கும் போகியே ரியாலே (Poggio Reale).	......	தீப்பிடித்தது.
இதாலிய ஆபிரிக்கா (Africa).		
எரிடிரியா (Eritrea) விலுள்ள அஸாப் (Assab).	......	சிலர் மாண்டனர். சிலருக்குக்காயம். கட்டடங்கள் இடிந்தன.
வேவுபார்த்தல்.—அபிஸீனியா (Abyssinia) இதாலிய ஸோமாலி லாண்ட் (Italian Somaliland).	......	......
4—11—40 (திங்கட்கிழமை).		
ஜெர்மனி, ஜெர்மனி ஐரோப்பாவில் ஆக்ரமித்திருக்கும் நாடுகள்.		
இரவில்.—இங்கிலீஷ் கால்வாய் (Channel) துறைமுகங்கள், ஆஸ்டெண்ட் (Ostend), புலாயின் (Boulogne), லாஹவேர் (Le Havre).	நஷ்டமில்லை.	பலத்த சேதம்.
இதாலிய ஆபிரிக்கா (Africa).		
நெகெல்லி (Neghelli).		
4 இதாலிய விமானங்கள்.—அபிஸீனியா (Abyssinia)	நஷ்டமில்லை.	1 விமானம் சுட்டு வீழ்த்தப்பட்டது.

தேதி.	பிரிடிஷ், கிரேக்க விமானப் படையெடுப்புகளின் விவரங்கள்.	பிரிடிஷ், கிரேக்க விமான நஷ்டம்.	எதிரிகளின் விமான நஷ்டமும்; விமான படையெடுப்புகளால் விளைந்த சேதமும்.
4—11—40.	(திங்கட்கிழமை)—தொடர்ச்சி.		
	இதாலிய ஆபிரிக்கா (Africa)—தொடர்ச்சி.		
	ராணுவ கட்டடங்கள்.—சைன்யங்கள் தங்குமிடம் கெரன் (Keren).	......	பல இடங்களில் தீப்பிடித்தன.
	அல்பேனியா (Albania) பிரதேசம்.—ஆர்கைரோகாஸ்ட்ரோ(Argyrokastro).	......	பலத்த சேதம்.
5—11—40.	(செவ்வாய்க்கிழமை).		
	ஜெர்மனி, ஜெர்மனி ஐரோப்பாவில் ஆக்ரமித்திருக்கும் நாடுகள்.		
	கப்பற்படை நிலயம்.—எம்டன் (Emden)		
	பெட்ரோல் கிடங்குகள், கப்பற் கட்டுமிடங்கள் ப்ரமன் (Bremen).	......	30 இடங்களில் தீப்பிடித்தன.
	கப்பற்கட்டு மிடங்கள்.— ப்ரமர்ஹாவன் (Bremerhaven).	......	பலத்த வெடிச்சத்தங்கள் கேட்டன.
	வாகீஸாக் (Vagesack) கப்பற்படை நிலயம்	......	......
	மின்சார உற்பத்திச்சாலை ஹாம்பர்க் (Hamburg).	......	......
	துறைமுகங்கள்.—புலாயின் (Boulogne) கலே (Calais), டன்கர்க் (Dunkirk), ஆண்ட்வர்ப் (Antwerp), ப்ளஷிங் (Flushing).	......	தகர்க்கப்பட்டன.
	விமான நிலயங்கள்.-விரோதி ஆக்ரமித்துக்கொண்டிருப்பவைகள்.	......	......
	விரோதி விமானங்கள்.—இங்கிலீஷ் கால்வாய் (English Channel).	2 விமானங்கள். நஷ்டமில்லை.	...... 1 விமானம் நஷ்டம்.
	இதாலிய ஆபிரிக்கா (Africa).		
	விரோதியின் சைன்யங்கள், மோட்டார் வண்டிகள்.—பார்டியா (Bardia), மாடலீனு (Maddelena)-க்கோட்டை கார்ன் எல் க்ரீன் (Garn El Grein).	......	வெடிமருந்துகள் தீப்பற்றி வெடித்தன. பலமோட்டார் வண்டிகள் நாசமாயின.

தேதி.	பிரிடிஷ், கிரேக்க விமானப் படையெடுப்புகளின் விவரங்கள்.	பிரிடிஷ் கிரேக்க விமான நஷ்டம்.	எதிரிகளின் விமான நஷ்டமும்; படையெடுப்புகளால் விளைந்த சேதமும்.
5—11—40. (செவ்வாய்க்கிழமை)—தொடர்ச்சி.			
	இதாலிய ஆபிரிக்கா (Africa)—தொடர்ச்சி.		
	ஜிபுடி (Jibuti)—டிரிடாவா (Diredawa) ரயில்வே பாதையிலிருக்கும் அடகுல்லா (Adagulla).	.. ...	ரயில் பாதை சேதமாயிற்று.
	விரோதியின் சைன்யங்கள்.—கஸாலாவு (Kassala)க்கு வடக்கே.	.. ...	......
	இதாலி (Italy) கிரீஸ் (Greece).		
	வேவுபார்த்தல்.—கிரேக்கருக்குச் சொந்தமான கடற்கரை, இதாலிய (Italy) பிரதேசம்.	நஷ்டமில்லை.	......
6—11—40. (புதன்கிழமை).			
	ஜேர்மனி, ஜேர்மனி ஐரோப்பாவில் ஆக்ரமித்திருக்கும் நாடுகள்.		
	பகலில்.—எண்ணெய் சுத்தி செய்யும் ஆலைகள்.—ஸால்ஸ்பர்க் (Salzburg).	......	தீப்பிடித்தன.
	எண்ணெய் ஆலைகள்.—லூனு (Leuna) ஹாம்பர்க் (Hamburg).	......	தீப்பிடித்தன.
	தொழிற்சாலைகள்.—டஸ்ஸல்டார்பு (Dusseldorf)க் கருகில்	... ...	சேதமாயின.
	ரயில் வண்டிகள் நிற்குமிடம், ஜங்ஷன்கள்.—ப்ரட்ஸ்ச் (Pretzsch) ஹாலே (Halle).	......	போக்குவரத்து சாதனங்கள் தடைப்பட்டன.
	விரோதியின் பீரங்கிகள்.— காப்கிரிநே (Cap Gris Nez).	......	தகர்க்கப்பட்டன.
	விமான நிலயம்.—ஹாம்ஸ்டீட் (Hamstede)		
	துறைமுகம் கப்பல்கள்.— கக்ஸ்ஹாவன் (Cuxhaven).	......	பல கப்பல்கள் சேதமாயின.
	மோட்டார்துணை காவல் கப்பல்கள்.—டென்ஹெல்டருக் (Denhelder) கப்பால்.	......	பல குண்டுகள் குறி பிசகாமல் விழுந்தன.
	விமானத் தொழிற்சாலைகள்.—பெர்லினுக் (Berlin)க் கருகேயுள்ள ஸ்பாண்டா (Spandau).	......	பலமாகத் தாக்கப்பட்டன.
	ரயில்வே ஜங்ஷன்.—ஜெர்மன் தலைநகரான பெர்லினு (Berlin)க்கு வடமேற்கே.	......	சேதமாயிற்று.

தேதி.	பிரிடிஷ், கிரேக்க விமானப் படையெடுப்புகளின் விவரங்கள்.	பிரிடிஷ், கிரேக்க விமான நஷ்டம்.	எதிரிகளின் விமான நஷ்டமும்; படையெடுப்புகளால் விளைந்த சேதமும்.
6—11—40. (புதன்கிழமை)—தொடர்ச்சி.			
	இதாலி (Italy).		
	கப்பற்படை நிலயங்கள், நாசகாரிகள், ஸப்மரைன்கள் (Submarines), ரயில்வே ஜங்ஷன்.—பிரிண்டிஸி (Brindisi).	……	பல இடங்களில் தீப்பிடித்தன. சேதம் அதிகம்.
	அல்பேனியா (Albania).		
	விமான நிலயம்—வலோனு (Valona). விமான நிலயங்கள், இதாலிய ஆகாயப் படை நிலயங்கள் அல்பேனியா (Albania).	……	தரையிலிருந்த சில விமானங்கள் சேதமாயின.
7—11—40. (வியாழக்கிழமை).			
	ஜேர்மனி, ஜேர்மனி ஐரோப்பாவில் ஆக்ரமித்திருக்கும் நாடுகள்.		
	குருப்ஸ் (Krupps) தொழிற்சாலை, எஸ்ஸன் (Essen).	……	அதிகச்சேதம்.
	எண்ணெய் ஆலை.—வெஸ்ஸர்லிங் (Wesserling)	……	பெருந்தீ கொழுந்துவிட்டெரிந்தது.
	ஸப்மரைன் (Submarine). நிலயம் லோரியண்ட் (Lorient).		
	உலைகள்.—டஸ்ஸல்டார்ப் (Dusseldorf), ஆபர்ஹாஸன் (Oberhausen).	……	ஒரு இரும்புத் தொழிற்சாலை தகர்க்கப்பட்டது.
	மின்சார உற்பத்திச்சாலை, கப்பற்படையைச் சேர்ந்த மராமத்து இலாகா, சைன்யங்கள் வசிக்குமிடங்கள், கப்பற்கட்டுமிடங்கள்.	……	எங்கு பார்த்தாலும் ஒரே தீமயம்.
	ரயில்பாதைகள்.—லோரியன்ட் (Lorient)	……	பலத்த சேதம் விளைந்தது.
	கப்பல்கள் நிற்குமிடங்கள்.—டார்ட்மண்ட் (Dortmund) எம்ஸ் (Ems) கால்வாய் உள்நாட்டு துறைமுகம்.— டுயிபர்க் (Duisburg).	…..	……

தேதி.	பிரிடிஷ், கிரேக்க விமானப் படையெடுப்புகளின் விவரங்கள்.	பிரிடிஷ் கிரேக்க விமான நஷ்டம்.	எதிரிகளின் விமான நஷ்டமும்; படையெடுப்புகளால் விளைந்த சேதமும்.
7—11—40. (வியாழக்கிழமை)—தொடர்ச்சி.			
ஜெர்மனி, ஜெர்மனி ஐரோப்பாவில் ஆக்ரமித்திருக்கும் நாடுகள்—தொடர்ச்சி.			
	துறைமுகம், கப்பல்கள்.— டன்கர்க் (Dunkirk), லாஹவேர் (Le Havre).	......	பலத்த சேதம்.
	விமான நிலயம்.—அப்பீவில் (Abbeville), லானியான் (Lannion).	......	கட்டடங்கள் தீக்கிரையாகின.
	பல விமான நிலயங்கள்.— ஜெர்மனி (Germany) விரோதிஆக்ரமித்திருக்கும் நாடுகள்.	......	சேதமாயின.
	வேடிமருந்து தொழிற்சாலைகள்.— ரூர் (Ruhr).		
இதாலிய ஆபிரிக்கா (Africa).			
	கப்பல்கள்.—ஜுபா (Juba) நதி.	நஷ்டமில்லை.	......
	ஸிவா (Siwa) என்னும் செழிப்பான பூமி	......	1 விமானம் சேதம்.
	மேற்கு பாலைவனம் (Western Desert)	நஷ்டமில்லை.	6 பேருக்குக் காயம்.
அல்பேனியா (Albania).			
	வேவுபார்த்தல்.--அல்பேனியா (Albania) இதாலிய விமானப்படை நிலயம்.— வலோனா (Valona).	......	தரையிலிருக்கும் பல விமானங்கள் நஷ்டமாயின.
இதாலி (Italy).			
	வேவுபார்த்தல்.—கிரீஸ் (Greece)ன் மேல் படையெடுப்புக்கு உபயோகப்படும் ஒட்ராண்டோ (Otranto) பிரிண்டிஸி (Brindisi) துறைமுகங்கள்.	......	......
8—11—40. (வெள்ளிக்கிழமை)			
ஜெர்மனி, ஜெர்மனி ஐரோப்பாவில் ஆக்ரமித்திருக்கும் நாடுகள்.			
	எண்ணெய் ஆலைகள்.-கெல்ஸன் கர்ச்சன் (Gelsenkirchen), பிராங்பர்ட் (Frankfurt).	......	தீப்பிடித்தன.

தேதி.	பிரிடிஷ், கிரேக்க விமானப் படையெடுப்புகளின் விவரங்கள்.	பிரிடிஷ், கிரேக்க விமான நஷ்டம்.	எதிரிகளின் விமான நஷ்டமும்; படையெடுப்புகளால் விளைந்த சேதமும்.
8—11—40. (வெள்ளிக்கிழமை)—தொடர்ச்சி.			

ஜெர்மனி, ஜெர்மனி ஐரோப்பாவில் ஆக்ரமித்திருக்கும் நாடுகள்—தொடர்ச்சி.

ஆலைகள், தொழிற்சாலைகள் —நியூரம்பர்க் (Nuremberg), ஆம்ஸ்டர்டாம் (Amsterdam).	......	நாசமாயின.
சாமான் கிடங்குகள்.— ஹாம் (Hamm), ஸோயஸ்ட் (Soest), ஆஸ்னூப்ருக் (Osnabruck), டூயிபர்க் (Duisburg) ரூர்ரார்ட் (Ruhrrort) ஹுக் ஆப் ஹாலந்து (Hook of Holland).	......	தீக்கிறையாகின.
ரயில்பாதைகள்.— ஸ்டட்கார்ட் (Stuttgart), மார்ஸ் (Mors), ஸார்ப்ரக்கன் (Sarrbrucken), மெயின்ஸ் (Mainz). லாஹவேர் (Le Havre).	......	அதிக நஷ்டம்.
ரயில்வே ஸ்டேஷன், சாமான் கிட்டங்கிகள்.—முனிச் (Munich).	......	எங்கும் ஒரே தீமயம்.
ஸப்மரைன் (Submarine) நிலயம்.—லோரியண்ட் (Lorient).	......	......
18 விரோதி விமான நிலயங்கள்.—		

இதாலிய ஆபிரிக்கா (Africa).

கப்பற்படை இலாகாவைச்சேர்ந்த கட்டடங்கள்.—டொப்ருக் (Tobruk).	......	கட்டடங்கள் இடிந்தன.
சைன்யங்கள் வசிக்குமிடங்கள்.—டெர்ணு (Derna).	......	தீப்பிடித்தன.
சைன்யங்கள் தங்குமிடம்.— அபிஸீனியா (Abyssinia)வில் கேரன் (Keren).	......	......
விமான இலாகாக் கட்டடங்கள்.—எரிடிரியா (Eritrea)விலுள்ள அகோர்தாத் (Agordat).	......	......

தேதி.	பிரிடிஷ், கிரேக்க விமானப் படையெடுப்புகளின் விவரங்கள்.	பிரிடிஷ், கிரேக்க விமான நஷ்டம்.	எதிரிகளின் விமான நஷ்டமும்; படையெடுப்புகளால் விளைந்த சேதமும்.
8—11—40. (வெள்ளிக்கிழமை)—தொடர்ச்சி.			
	இதாலி (Italy).		
	வேடிமருந்து தொழிற்சாலை.-பியட் (Fiat)	......	வெடிச்சத்தங்கள் கிளம்பின.
	விமானத் தொழிற்சாலை.—டூரின் (Turin)		சேதமாயின.
	தொழிற்சாலைகள் பிரேல்லி.— (Pirelli)		
	மின்சாரசாமான்கள் உற்பத்திச்சாலைகள்.—மிலான் (Milan) டாரண்டோ (Taranto).	......	தீப்பிடித்தது.
	துறைமுகங்கள், கப்பல்கள், ரயில்வே ஸ்டேஷன்—பிரிண்டிஸி (Brindisi) ஸார்டினியா (Sardinia) விலுள்ள காக்லியாரி (Cagliari).	......	பலசேதமாயிற்று.
	அல்பேனியா (Albania).		
	விமானநிலயம்.— வலோனு (Valona)	......	சேதமாயிற்று.
	கப்பல்கள்.—வலோனு (Valona)த் துறைமுகம்.	......	பலகப்பல்கள் சேதமாயின.
9—11—40. (சனிக்கிழமை).			
	ஜெர்மனி, ஜெர்மனி ஐரோப்பாவில் ஆக்ரமித்திருக்கும் நாடுகள்.		
	விமான நிலயங்கள்.–ஜெர்மனி (Germany) ஜெர்மன் ஆக்ரமித்திருக்கும் நாடுகள்.	......	தரையிலிருந்த 6 விமானங்கள் தீக்கிறையாகின.
	ஸப்மரைன் (Submarine) நிலயம்.—லோரியண்ட் (Lorient).	......	பலத்த வெடிச் சத்தங்கள் கிளம்பின.
	கப்பல் நிற்குமிடங்கள்.—புலாயின் (Boulogne), கலே (Calais).	நஷ்டமில்லை.	சேதமாயிற்று.
	இதாலி (Italy).		
	வேவுபார்த்தல்.–இதாலிய (Italian) கடற்கரை.		

தேதி.	பிரிடிஷ், கிரேக்க விமானப் படையெடுப்புகளின் விவரங்கள்.	பிரிடிஷ், கிரேக்க விமான நஷ்டம்.	எதிரிகளின் விமான நஷ்டமும்; படையெடுப்புகளால் விளைந்த சேதமும்.
10—11—40. (ஞாயிற்றுக்கிழமை).			
	ஜெர்மனி, ஜெர்மனி ஐரோப்பாவில் ஆக்ரமித்திருக்கும் நாடுகள்.		
	இரவில்.—பால்டிக் (Baltic)கிலிருந்து பிஸ்கே (Biscay) வளைகுடா வரையில்.		
	எண்ணெய் ஆலை.—கெல்ஸன் கர்ச்சன் (Gelsenkirchen), ப்ரமன் (Bremen).	......	தீப்பிடித்தது.
	இல்ஸ் பர்க்பா (Ilse Bergbau) எண்ணெய் சுத்தி செய்யும் ஆலைகள்.—ட்ரஸ்டனுக் (Dresden)கு வடக்கே இருக்கும் ரூர்லண்ட் (Ruhrland).	......	தீப்பற்றி எரிந்தது.
	தொழிற் சாலைகள்.—எஸ்ஸனி (Essen)ல் க்ருப்ஸ் தொழிற்சாலை, மான்ஹீம் (Mannheim), ஆம்ஸ்டர்டாமி (Amsterdam)ல் பாக்கர் (Fokker) தொழிற் சாலை, ட்ரஸ்டன் (Dresden).	......	பலத்த சேதம்.
	கப்பல் நிற்குமிடங்கள், கப்பல்கள்.—கீல் (Kiel), டூயிபர்க் (Duisberg), லோரியண்ட் (Lorient), செர்பர்க் (Cherbourg), லஹாவர் (Lehavre), டன்கர்க் (Dunkirk), புலாயின் (Boulogne), கலே (Calais), ப்ளஷிங் (Flushing).	......	பல கப்பல்கள் சேதமாயின. துறைமுகங்களில் பலத்த சேதம்.
	ரயில்வே ஜங்ஷன்கள்.—டான்ஸிக் (Danzig), டெஸா (Desau), மன்ஸ்டர் (Munster), மான்ஹீம் (Mannheim), ட்ரஸ்டன் (Dresden).	......	எங்கும் பெருந்தீ சூழ்ந்தது. போக்குவரத்து தடைப் பட்டது.
	14 விமான நிலயங்கள்.—ஜெர்மனி (Germany), ஜெர்மன் ஆக்ரமித்திருக் கும் நாடுகள்.		
	இதாலிய ஆபிரிக்கா (Africa).		
	எரிடிரியா (Eritrea)வும், அதனுடைய எல்லைப்புற பிராந்தியங்களும்.	......	பல இடங்களில் தீப்பிடித்தன.
	அஸாப் (Assab), டெக்ளிஸான் (Teclezan), அகோர்தத் (Agordat), கேரன் (Keren).	... ..	சேதம் அதிகம்.

தேதி.	பிரிடிஷ், கிரேக்க விமானப் படையெடுப்புகளின் விவரங்கள்.	பிரிடிஷ், கிரேக்க விமான நஷ்டம்.	எதிரிகளின் விமான நஷ்டமும் படையெடுப்பால் விளைந்த சேதமும்.
10—11—40.	(ஞாயிற்றுக்கிழமை)—தொடர்ச்சி.		
	இதாலி (Italy).		
	ஸார்டினியா (Sardinia)வில் காக்லியாரி (Cagliari).	......	ஒரே தீ மயம்.
	கப்பல் நிற்குமிடங்கள், ராணுவ நிலயங்கள்.—ஸார்டினியா (Sardinia).		
	எண்ணெய் சுத்தி செய்யும் ஆலே, ரயில்வே ஜங்ஷன், ஸ்டேஷன்.—நேபிள்ஸ் (Naples).	......	தீப்பிடித்தது.
	அல்பேனியா (Albania).		
	சிறிய துறைமுகம், ரோட்டுச் சந்திப்பு.—கோனிஸ்பால் (Konispol).		
	விமான நிலயம்.—வலோனு (Valona).	......	சேதமாயிற்று.
	வேவு பார்த்தல்.—அல்பேனியா (Albania).		

தேதி.	விரோதி விமானப் படையெடுப்புகளின் விவரங்கள்.	விரோதியின் விமான நஷ்டம்.	பிரிடிஷ், கிரேக்க விமான நஷ்டமும்; படையெடுப்பால் விளைந்த சேதமும்.
4—11—40	(திங்கட்கிழமை).		
	பிரிடன் (Britain)		
	பகலில்.—விமானப் படையெடுப்பே இல்லை.	......	லண்டனில் வெகு நேரம் விமானப் படையெடுப்பே இல்லை.
	இரவில்.—லண்டன் (London) பிரதேசம், மிட்லண்ட்ஸ் (Midlands), கிழக்கு ஸ்காத்லாந்து (Scotland).	......	சேதம் அதிகமில்லை, சிலருக்குத்தான் காயம்.
	கிரீஸ் (Greece)		
	விமானப் படையெடுப்பிலிருந்து தப்பி வந்து வீடு வாசலின்றியிருப்பவர்கள் இருக்கும் இடங்கள். ஸலானிகா (Salonika).	......	பல ஜனங்கள் இறந்தனர்.

தேதி.	விரோதி விமானப் படையெடுப்புகளின் விவரங்கள்.	விரோதியின் விமான நஷ்டம்.	பிரிடிஷ், கிரேக்க விமான நஷ்டமும்; படையெடுப்பால் விளைந்த சேதமும்;
5—11—40. (செவ்வாய்க்கிழமை).			
	பிரிடன் (Britain)		
	காலையில்.—இரண்டு கடற்கரைப் பட்டணங்கள், கெண்ட் (Kent).	......	சேதமில்லை.
	பகலில்.—பட்டணங்கள்—கெண்ட் (Kent), ராம்ஸ்கேட் (Ramsgate) பிரதேசம்.	......	சிலர் மாண்டனர். சிலருக்குக் காயம்.
	இரவில்.—லண்டன் (London) பிரதேசம், மிட்லண்ட்ஸ் (Midlands), கிழக்கு ஸ்காத்லாந்து (Scotland).	...... 7 விமானங்கள்.	சொற்பசேதம், சில கட்டடங்கள் சேதமாயின. 5-விமானங்கள்; 3-விமானிகள் பத்திரம்.
	கிரீஸ் (Greece)		
	பிரேயஸ்.—(Piraeus), பாலிரான் (Phaleran) வளைகுடா, ஆதன்ஸ் (Athens) துறைமுகம், கார்ப்யூ (Corfu)	2 விமானங்கள், பல விமானங்கள் சேதமாயின.	பல கட்டடங்கள் இடிந்தன. சிலருக்குத்தான் காயம். நஷ்டமில்லை.
6—11—40 (புதன்கிழமை)			
	பிரிடன் (Britain)		
	பகலில்.—ஸவுதாம்டன் (Southampton) பிரதேசம்.	......	சில கட்டடங்கள் இடிந்தன, சிலர் கொல்லப்பட்டனர்.
	இரவில்.—லண்டன் (London) பிரதேசம்.		சில கட்டடங்களின் மேல் குண்டுகள் வீழ்ந்தன.
	பல பிரதேசங்கள்.—ஹோம் கவுண்டீஸ் (Home Counties), இங்கிலாந்தி(England)ன் தெற்கு, தென்கிழக்குப் பாகங்கள்.	......	சிலர் கொல்லப்பட்டனர், சிலருக்குக் காயம்.
	பட்டணம்.—மிட்லண்ட்ஸ் (Midlands),		4 விமானங்கள்.
	கிராமங்கள்.—யார்க்ஷயர் (Yorkshire)	6 விமானங்கள்,	1 விமானி பத்திரம்.

தேதி.	விரோதி விமானப் படையெடுப்புகளின் விவரங்கள்.	விரோதியின் விமான நஷ்டம்.	பிரிடிஷ், கிரேக்க விமான நஷ்டமும்; படையெடுப்பால் விளைந்த சேதமும்.
6—11—40. (புதன்கிழமை)—தொடர்ச்சி.			
	கிரீஸ் (Greece)		
	வோலோ.-(Volo), லாரிஸ்ஸா (Larissa), பாட்ராஸ் (Patras), ஆதன்ஸ் (Athens)		பல ஜனங்களுக்குக் காயம்.
	துறைமுகம்.—கோரிந்த் (Corinth), யூகோஸ்லாவியா (Yugoslavia) நடுநிலைமைநாடு.	......	பலருக்குக் காயம்.
	மொனுஸ்டீர் (Monastir) இரண்டுதரம்.	......	பலர் மாண்டனர்.
7—11—40 (வியாழக்கிழமை),			
	பிரிடன் (Britain)		
	பகலில்.—லண்டனி(London)ன் சுற்றுப்புறங்கள்.	......	மிக சொற்ப சேதம்.
	இரவில்.—லண்டன் (London), ஹோம் கவுண்டீஸ் (Home Counties), மிட்லண்ட்ஸ் (Midlands), ஒரு பட்டணம்—தென் மேற்கு இங்கிலாந்து (England).	......	வீடுகளும், கடைகளும் சேதமாயின; சிலர் மாண்டனர்; காயம் பட்டவர்கள் மிக சொற்பம்.
	இங்கிலாந்தி(England)ன் பல பாகங்கள்.	7 விமானங்கள்.	5 விமானங்கள், எல்லா விமானிகளும் பிழைத்திருக்கிறார்கள்.
	கிரீஸ் (Greece)		
	மிஸ்ஸோலாங்கி (Missolonghi), கார்ப்யூ (Corfu), சில பட்டணங்கள். கிராமங்கள்—உள் நாட்டில்.		
8—11—40. (வெள்ளிக்கிழமை).			
	பிரிடன் (Britain)		
	பகலில்.—லண்டன் (London) பிரதேசம், ஒரு இடம்—மேற்குக் கடற்கரை, ஒரு கிராமாந்தரப் பிரதேசம்—மிட்லண்ட்ஸ் (Midlands).	......	சேதமுமில்லை, ஒருவருக்கும் காயமுமில்லை.
	இரவில்.—லண்டன் (London). இங்கிலாந்தி (England)ல் வேறு சில பாகங்கள்.	18 விமானங்கள்.	சேதமில்லை. 4 விமானங்கள்; 2 விமானிகள் பத்திரம்.

தேதி.	விரோதி விமானப் படையெடுப்புகளின் விவரங்கள்.	விரோதியின் விமான நஷ்டம்.	பிரிடிஷ், கிரேக்க விமான நஷ்டமும்; படையெடுப்பால் விளைந்த சேதமும்.
9—11—40 (சனிக்கிழமை).			
	பிரிடன் (Britain).		
	பகலில்.—பல இடங்கள்—மிட்லண்ட்ஸ் (Midlands), இங்கிலாந்தி (England)ன் தென்கிழக்கு, தென்மேற்கு, வடகிழக்குப் பாகங்கள்.	......	பலத்தசேதமில்லை. காயம்பட்டவர்கள் மிகச்சொற்பம்.
	இரவில்.—பல இடங்கள்—இங்கிலாந்து (England), வேல்ஸ் (Wales).	6 விமானங்கள்.	சொற்பச்சேதம். நஷ்டமில்லை.
	கிரீஸ் (Greece).		
	ஒரு கிராமம்.—உள் நாட்டில் ...	1 விமானம்.	சேதமில்லை.
	ஆதன்ஸ் (Athens).—விமான அபாய எச்சரிக்கைதானிருந்தது.	நஷ்டமில்லை.	தூரத்தியடிக்கப் பட்டன.
10—11—40. (ஞாயிற்றுக்கிழமை).			
	பிரிடன் (Britain).		
	பகலில்.—ஸில்லி (Scilly) தீவுகள்;	......	சொற்ப நஷ்டம்.
	சில பட்டணங்கள்.—கெண்ட் (Kent), ஸஸ்ஸெக்ஸ் (Sussex) கடற்கரைகள், டார்ஸெட் (Dorset) கடற்கரை.	......	காயம்பட்டவர்கள் மிகச்சிலர்.
	இரவில்.—தேம்ஸ் (Thames) நதி முகத்துவாரம், லண்டன் (London), இங்கிலாந்தி (England)ல் வேறு சில இடங்கள்.	......	சில இடங்கள் தீப்பிடித்தது; ஆனால் உடனே அணைக்கப் பட்டுவிட்டது.
	பிரிடிஷ் ஆபிரிக்கா (Africa).		
	கைரோவி (Cairo)ன்.—சுற்றுப்புரங்கள்.		
	இஸ்லாமியா (Islamia).—		
	கிரீஸ் (Greece).		
	கானியா (Canea).—கிரீட் (Crete) தீவில்.		

தேதி.	விரோதி விமானப் படையெடுப்புகளின் விவரங்கள்.	விரோதியின் விமான நஷ்டம்.	பிரிடிஷ், கிரேக்க விமான நஷ்டமும்; படையெடுப்பால் விளைந்த சேதமும்.
11—11—40. (திங்கட்கிழமை).			
	பிரிடன் (Britain).		
	பகலில்.—லண்டன் (London), தென் கிழக்குக் கடற்கரை, ஸப்போக் (Suffolk).	13 ஜெர்மன் விமானங்கள், 13 இதாலிய விமானங்கள்.	2 விமானங்கள். மிகச் சொற்பசேதம்.
	துணைக்காவல் கப்பல்கள்.—தேம்ஸ் (Thames) நதி முகத்துவாரம்.	......	ஒரு கப்பலுக்காவது சேதமில்லை.
	துணைக்காவல் கப்பல்கள்.—வடகடல் (North Sea).	5 விமானங்கள், 2 விமானங்களுக்குச்சேதம்.	2 கப்பல்களுக்கு சொற்பச்சேதம்.
	இரவில்.—லண்டன் (London) பிரதேசம்; இங்கிலாந்தி (England)ன் வேறு சில பாகங்கள்.	......	இன்று இரவில் படையெடுப்பு வெகு சீக்கிரம் முடிந்துவிட்டது.
	கிரீஸ் (Greece).		
	சில கிராமங்கள்.—கிரீட் (Crete) தீவு ...	1 இதாலிய விமானம்.	சேதமே இல்லை.

யுத்தக் குறிப்புகள்.

விமான மார்க்கத் துணுக்குகள்.

சில தினங்களிற்குமுன் டோவர் ஜலசந்தியில் ஐந்து நிமிஷ நேரத்தில் ஆங்கில 'ஸ்பிட்பையர்' விமானங்கள் ஜெர்மானிய முழுகிக் குண்டுபோடும் விமானங்களில் (dive-bombers) "பதினெட்டு ஆறு" விமானங்களை சாய்த்தன. தரை மட்டத்திற்கு மேல் முப்பதினாயிரம் சொச்சம் அடி உயரத்தில் 'தடுப்பு'ப் பிரயோகம் செய்து வந்ததில் இவ்வளவு உயர்ந்த 'சராசரி' சமீபத்தில் கிடைக்கவில்லை. எதிரி பந்துருட்டுவதில் 'ஓட்டம்' ஜாஸ்தி எடுக்க முடியவில்லை என்றாலும், பிரிடிஷ் 'முளை'களை எதிரியால் விழுக்காட்ட முடியவில்லை. இம்மாதிரி கிரிக்கெட் பரிபாஷையிலேயே பேசிக்கொண்டுபோக முடியாது, அதனால் விஷயத்தை கவனிப்போம். முக்கியமாக கவனிக்க வேண்டியது என்னவென்றால் பிரிடனின்பேரில் ஜெர்மன் விமானப் படையெடுப்பு கொஞ்சமும் பலிக்காமல் போய்விட்டது. ஜெர்மானியர் இழுத்துக் கட்டிக்கொண்டு எதிர்க்க வந்ததில் பிரிட்டனின் பொட்டில் அடிக்கமுடியவில்லை; தங்களுக்கு ஏற்பட்ட விபத்துக்கள் தாங்க முடியாமல் வேறு யோசனைகள் செய்ய ஆரம்பித்தார்கள். எடுத்தார்கள் வேறு யுக்தி; சாதாரண யுத்த விமானங்களைக் குண்டு போடும் 'பாம்பர்' (bomber) களாக அவசரமாக மாற்றி வெகு உயரம் ஆகாயத்தில் கிளம்பி லண்டன் போன்ற சுலபமாக குறி வைக்கக்கூடிய இடங்களில் இரவில் குண்டு போட ஆரம்பித்தார்கள். அதாவது, ராணுவ கேந்திரங்களைத் தாக்குவதென்பதைவிட்டு பெரும் வெடி குண்டுகளை கிழவர்கள், ஸ்திரீகள், குழந்தைகள் பேரிலும், பெரிய ஆங்கில கவிகள், சிற்பிகள் முதலியவர் மணங்கமழ்ந்திருக்கும் இடங்களிலும் வாரி இறைத்து பயமும் மனச்சோர்வும் கிளப்பிவிட முயற்சி செய்ய கிளம்பி விட்டார்கள்.

சொற்ப அளவிற்கேனும் ஜெர்மானியர் இப்படிச் செய்வது சாத்தியமாய் இருக்கிறதே என்றால், ஜெர்மானியர் உயரக்கிளம்பி குண்டு பெட்டியின் பூட்டைத் திறக்க வேண்டியதே தவிர அவர்களுக்கு வேறு வேலை கிடையாது; ஆனால் அவர்கள் கொட்டத்தை அடக்க ஆங்கில விமானங்கள் கிளம்பி வெகு உயரம் சென்று எதிரியின் போக்கு வரத்தை கவனித்து அதற்கேற்க எதிர்ப்பு வேலை செய்து சிதற அடிக்கவேண்டிய பொறுப்புடையவை. அம்மாதிரியான படையெடுப்புகள் வெகு பலத்துடன் செய்யப்பட்டாலுமே, எதிரியின் சங்கியை பலத்தாலேயே ஆங்கில விமானப்படையில் கொஞ்சம் சேதம் ஏற்படுவது இயல்பு. ஆனால் அதில் ஆச்சரியம் என்னவென்றால், ஆங்கில விமானப்படைச்சேதம் ரொம்ப குறைவாக இருக்கிறது என்பதுதான். விதிகளின் வரையரவொன்றும் இல்லாமல் சமயத்திற்கேற்றபடி ஜெர்மானியர் இரவு நேரத்தில் படையெடுக்கிறார்கள். ஆனால் இப்படையெழுச்சிகளை வகையாய்க் கண்டிக்க வழி இருபுறத்தாருக்குமே அகப்படவில்லை. ஆனால் மேலேகண்ட விதயாக மாற்றப்பட்ட

இந்த "ஹூண" (ஜெர்மானிய) குண்டுபோடும் விமானங்களிற்கு மூன்று முக்கியமான விதங்களில் சங்கடமுண்டு.

(1) அசல் குண்டுபோடும் விமானங்கள் தூக்கிச் செல்லக்கூடிய குண்டுகளில் பத்தில் ஒரு பாகந்தான் இவைகள் தூக்கிச்செல்ல முடியும்.

(2) அவைகளில் சஞ்சார சக்தி வெகு குறைவு.

(3) 30,000 அடி உயரத்திலிருந்து சரியானபடி குறி வைத்தடிப்பது முடியாது.

இவை எல்லாம் தொழில் முறையிலுள்ள வில்லங்கங்கள்; இன்னுமொரு வில்லங்கமுண்டு. இவர்கள் தந்திர மந்திரங்களால் ஆங்கிலேயர் முயற்சியாவது மனோதிடமாவது எள்ளளவும் குறையவில்லை; அக்னி ஜ்வாலையில் கொஞ்சம் 'ஐஸ்-க்ரீம்' போட்டால் எந்த அளவிற்கு அக்னி மந்தப்படுமோ, அந்த அளவிற்குத்தான் ஆங்கிலேயர் சோர்வடைந்திருக்கிறார்கள் என்று சொல்ல வேண்டும்!!

இன்னுமொரு அவிசல் முட்டை.

ஹிட்லர் காலை போஜனத்திற்காக வைத்திருந்தார் ஒரு முட்டை; அதன் பேரில் எழுதியிருந்தது "அமெரிக்க தேர்தல்" என்று; அதை நாக்கைக் கொட்டிக்கொண்டு நவம்பர் மாதம் 7-ம் தேதியன்று எடுத்து ஓட்டை உடைத்தார்; அடித்தது கவிச்சல் நாற்றம்! அக்டோபர் 23-லியே ஐரோப்பிய யுத்தத்தில் அமெரிக்கர் தலையிடா வண்ணம் அமெரிக்கத் தலைவர் தேர்தலுக்கு முன்னமேயே வேண்டிய காரியங்களை செய்து முடிக்கவேணும்" என்று பர்லினிலிருந்து ஜெர்மானிய தலைவர்கள் சொல்லியிருந்தார்கள். என்ன காரியம்? ஜிப்ரால்டரில் வந்தேரவேணும் என்ற ஸ்பெயின் தேசத்தார் அழைப்பு, அல்லது கிரேக்க தலைநகரான ஆதன்ஸ் (Athens) ஆவது இதாலியர் பிடித்துக்கொள்ளுதல் என்ற காரியம்; என்ன ஏற்பாடு செய்தென்ன; அமெரிக்க முட்டை ஹிட்லர் மூக்கில் நாற்றமெடுத்து விட்டது; ஏனென்றால், ஹிட்லரில் 2-ம் நம்பர் வைரியான Mr. ரூஸ்வெல்ட் (1-ம் வைரி Mr. சர்ச்சில்) அமெரிக்கத் தலைவர் தேர்தலில் தேர்ந்தெடுக்கப்பட்டு, வெளிப்படையாகவும் ஜய முழக்கத்துடனும் பிரிடனுக்கு உதவிபுரிய கிளம்பிவிட்டார்.

ஆங்கில உக்கிராணம்.

உக்கிராணத்தில் ஏராளமான சாமான் இருக்கிறது. ஆயினும், பாவம், லக்ஷகணக்கான டன் கனமுள்ள கப்பல்கள் உடைந்தும், அநேக லக்ஷோபலக்ஷம் பொருமதியுள்ள உலகத்தின் சாமான்கள் கடலில் முழுகியும் வியர்த்தமாகின்றன. யுத்தமென்றால் இதுதான்—நவீன பாணி யுத்தம். அக்டோபர் மாதக் கடைசி பாகத்தில் மொத்தச்சேதம் இரண்டு லக்ஷம் டன். அதில் 146,000 டன் பிரிடிஷாருக்குச் சொந்தம். தங்கள் கடலுக்குட்செல்லும் கப்பற் தலைவர்களை நாஸிகள் பட்டங்கள் கொடுத்துக் கொண்டாடுகிறார்கள்; ஆயினும் இது வரும் என்று எதிர்பார்த்ததுதான், பல்லைக் கடித்துக் கொண்டு சகித்து வரப்படுகிறது, முடிவில் இந்த எதிர்ப்பு அடக்கவும்படும். இது கேவலம் பிரசாரமல்ல, உண்மை நடப்பு.

முதலில் சொன்ன விஷயத்திற்குக் காரணம் என்ன? பிரான்ஸ் (France) தலை சாய்த்ததால் பிரிடனுக்கு பிரெஞ்சு கப்பற்படை உதவி இல்லாமல் போனதுடன், ஜெர்மானியர் கடற்குட்செல்லும் கப்பல்களுக்கு அட்லாண்டிக் சமுத்திரக்கரைகளில் தங்கும் ஸ்தலங்கள் கிடைத்தன; மற்றொரு காரணம், இங்கிலாந்திற்கும் அமெரிக்காவிற்கும் வியாபாரம் மிகுதியானதுடன், குறிவைக்க கப்பல்கள் மிகுதியாயின. இரண்டாவது விஷயத்திற்குக் காரணமென்னவென்றால் வருகிற குளிர்காலம் பூராவுக்கும் வேண்டிய உணவுப் பொருள்களுக்கும் யுத்த தளவாடங்களுக்கும் குறைவில்லையென்று லார்ட் வுல்டனும் (Lord Woolton) Mr. பெவினும் (Mr. Bevin) காரியகாரணங்களுடன் சொன்னது. மூன்றாவது; புதிப்பிப்பதினாலும் விலை கொடுத்து வாங்குவதாலும், பிரிடனின் வியாபாரக் கப்பல்களின் சங்கியையும் பலமும் அதிகரிக்கப்பட்டும், காபந்து கப்பற்படையைப் பலப்படுத்த அமெரிக்கா நாசகாரிகள் சம்பாதிக்கப்பட்டும் வருவதுடன், யுத்த சமயத்தில் யுத்தக் கப்பல்கள் கட்ட பிரிடன் செய்த ஏற்பாட்டால் கைகண்ட பலன் என்ன, குளிர்காலம் சமீபிப்பதால் வட அட்லாண்டிக் சமுத்திரத்தில் கடலுக்குட்செல்லும் கப்பல்களின் ஜம்பம் செல்லாது என்பதென்ன, மேலே சொன்ன உண்மை நம்பிக்கைக்குக் காரணம்.

கட்டியான விஷயங்கள்.

இவைகளை உற்றுக் கவனிப்போம். ஸுகோர் சவுலாக பிரயாணம் சென்றதும் ப்ரான்கோவை தன்னுடன் சேரும்படி ஹிட்லர் அழைத்ததும் நமது கண்களில் மண்ணை போட்டுப் பால்கன் நாடுகளில் புகுந்து புரட்சி செய்ய வேண்டுமென்று இருந்திருக்கலாம்; இதற்கு மாறான அபிப்பிராயத்தைக்காட்ட, இதாலி, காரணமேயில்லாமல் அயோக்கியத்தனமாக க்ரீஸ்பேரில் கொஞ்சமேனும் களைகட்டாத விதமாக படையெடுத்திருக்கலாம்; எப்படிக்கிருந்தாலும் 3 அனுமானங்கள் செய்யலாம் :—

அடிப்படையானவிஷயம் ஒன்று அதாவது, நாஸி தத்துவத்தை அடியோடு கைக்கொண்டதாலேயே பிரமாதமான யுத்தம் கிளம்பவேண்டியதாயிற்று. உலகம் முழுமையுமே தன்னரசு நாடாய் ஆளும்விதமாக புது முறைப்படி அரைமனதாய் ஒன்றும் செய்வதில்லையென்று ஏற்பட்டுவிட்டது; உலகம் முழுவதும் ஜயிக்க வேணும், அல்லது அடியோடு மாண்டு போகவேணும் என்றாகிவிட்டது. இதன் பயனாக உலகிலுள்ள ஒவ்வொரு தேசமும், கொஞ்சமாகவோ ஜாஸ்தியாகவோ, இதில் சிக்கிக்கொள்ளவேணும். பிரான்ஸ் கீழேபடுத்தவுடன், ஜெர்மானியர் ஜயத்திற்கு பிரிடன் ஒன்றுதான் தடை. ஜெர்மன் படையெடுப்பை பிரிடன் எதிர்க்காதிருந்திருந்தால், ஐரோப்பா, ஆபிரிக்கா, மத்தியகிழ்பிரதேசம் எல்லாம் ஒரே க்ஷணத்தில் இருளடைந்து போயிருக்கும்.

இதை ஒட்டி 3 அனுமானங்கள் :—(1) பிரிடன் தோல்வி யடையாதலால், அதன் ஸாம்ராஜ்யத்தின் ஜீவதாதுக்களை தாக்கவேண்டிய நிர்பந்தம் ஜெர்மனிக்கும் இதாலிக்கும் ஏற்பட்டுவிட்டது.

(2) பிரிடிஷ் படை விரைவில் அதிகரித்துவரும் எகிப்தின் பேரில் படையெடுக்க முஸோலினியின் தயக்கம்.

(3) மத்தியதரைக்கடலில் பிரிடனுடைய ஆதிக்கத்தாலும், கீழ் ஆபிரிக்காவிலுள்ள இதாலிய படைகள் கொஞ்சம் கொஞ்சமாக அடைபடுவதாலும் ஏற்படும் இக்கட்டான நிலை.

இவைகளிலிருந்து கவனம் அகலவேண்டுமாறு ஏமாற்றல் வேலைகள் பல ஜெர்மானியர் செய்யலாம். டச்சுகீழ்தீவுகளும் ஜப்பானும்; அமெரிக்கரை எச்சரிக்க மூவர் உடன்படிக்கை; இதரர்கள் சொத்துசம்பந்தமாக ருஷியாவிற்கும் ஜெர்மனிக்கும் ஏற்பாடுகள்; முதலிய யுக்திகள் நடைபெறலாம். எது எப்படியிருந்தாலும், பிரிடன் தகர்க்கப்பட முடியாத நிலைமையில், பிரிடனின் ஸாம்ராஜ்யத்தில் ஜீவனான இடங்களை எதிரிகள் தாக்க எத்தனிப்பார்கள். எத்தனித்தாலென்ன? மணியான சயினியமும், கதிகலங்க அடிக்கும் உயர்ந்த கப்பற்படையும், உலகத்தில் எங்கேயும் இதுவரை காணப் படாத வீரத்தன்ம் பொருந்திய விமானப்படையும், எதிரியின் எதிர்ப்பை கீழ்மத்தியதரைக் கடலில் எதிர் பார்த்துக் கொண்டு தயாராக இருக்கிறார்கள்.

மண்டைக்குழப்பம்.

முடியிழந்தான், சிரமதசைதான் பாவம்! (ஆயினும், யார் கண்டார்கள். படாடோபப் பிரியனாதலால், முடியிழந்தாலும் முடியை மாட்டிக் கொண்டிருக்கக்கூடியவன்தான். காரோல் (Carol) குதிரை கீழே தள்ளியதுமல்லாமல் குழியையும் வெட்டியதுபோல், அவனை ஜெர்மானியர் (அல்லது இரும்புக்கார்வைப்படையாயிருந்தாலுமிருக்கலாம்.) பட்டத்தைப் பிடுங்கியதுடன் அவனையும் அழகும், அன்பும் வாய்ந்த அவனது யூதஜாதி வைப்பாட்டியையும், அவர்கள் போய் தஞ்சமடைந்த ஸ்பெயின் தேசத்திலிருந்து வெளியில் விரட்டப்பார்க்கிறார்கள். ஒருவேளை காரோல் இன்னும் ஏதேனும் உபகாரம் செய்யக்கூடியவனாகவிருக்கலாம்; பால்கன் நாட்டு அரசியல் விஷமங்களில் அவன் அசடனல்ல. மார்செயில்ஸ் கடற்படையில் விரோதியொருவன் போட்ட குண்டால் உயிர் மாய்ந்த அவன் மைத்துனன் யூகோஸ்லாவியா அரசனைப்போலவே, உலகம் சமாதானமாகவிருக்கவேண்டுமென்றால், பால்கன் நாடுகள் அமைதியாயிருக்க வேண்டியதவசியமென்று காரோலுக்கு செம்மையாகத் தெரியும். பீடர் மன்னனும், பிரஞ்சு மந்திரி லூயிபார்த்தோவும் உலகிலிருந்து அனுப்பப்படவே, அந்த யோசனையெல்லாம் பஞ்சாய்ப் பறந்தோடிவிட்டன. ஆயினும் காரோல் மன்னன் "இரும்பு காவற்படை"யைக் கொஞ்சம் அடக்கியாண்டான். பிரிடனிடம் சார்புள்ள அவன் மந்திரி அண்டொநெஸ்குவை அவர்கள் கொலைசெய்தவுடன், அவன் நடவடிக்கை தைரியத்தையும், நெஞ்சழுத்தத்தையும் காட்டியது. அவன் சொந்த வாழ்க்கையில் முறைதப்பி நடவாதிருந்தானாகில், பிரிடன் அவனுக்கு இன்னும் கொஞ்சம் சகாயம் செய்திருப்பார்கள். ஆங்கிலப் பத்திரிகைகள் அவனது வாழ்க்கையை மெச்சவில்லை. அதாவது, ஆங்கிலேயர்கள் அதை ஆதரிக்கமுடியவில்லை. பின்னால் ஜாமீன் வகையில் சகாயம் வந்தபோது, காலம் மீறிப்போய்விட்டது. ருமேனியா எளிய தேசம்; ஊரெங்கும் பல வேஷங்கள் பூண்டு, ஜெர்மானியர் துளைத்துக்கொண்டிருந்தார்கள். வியாபாரிகளாகவும்,

பிரயாணிகளாகவும், போலீஸ்காரர்களையே வம்புசெய்யும் கொள்ளைக்காரர்களாகவும் ஏராளமான பண பலத்தைக்கொண்டும் செய்துவந்த அக்கிரமங்களை அரண்மனை கட்சியார் கண்டிக்க சாத்தியமில்லை. காரொல் 1938ல் ஒரு நல்ல வேலை செய்தான். வாயில்லாப் பூச்சியான காக் (Gog) என்பவனை மந்திரியாக நியமித்தான்; காக் யூதவிரோதி, நாஸிவகையான்; மந்திரி வேலையில் ஒரு காசுக்குக்கூட பிரயோசனமில்லை என்று நிரூபித்துவிட்டான். காரொல் அவனை வேலையைவிட்டுத் தள்ளினான்; ஆனால் காக் கையாலாகாதவனென்று பகிரங்கப்படுத்திவிட்டதில் ஜெர்மானியருக்குத் காரொல் பேரில் ஆத்திரம் கிளம்பிவிட்டது; இப்போது (பட்டம் இழந்தபின்) ஏனடா இப்படிச் செய்தோம் என்று எண்ணியெண்ணி தேக்கமடைவான் போலும்! ஐயோ, பாவம்!

அனுபந்தம் I.

(A)

மிஸ்டர் சர்ச்சிலின் அழுத்தமான பேச்சு.

சென்ற வாரம் காமன்ஸ் சபையில் செய்த பிரஸங்கத்தில் மிஸ்டர் சர்ச்சில் சர்வாதிகாரிகளை எதிர்க்க ஏற்கனவே செய்த பிரயத்தினங்களையும், இனி செய்யப்போவதையும் எடுத்துக்காட்டினார். அவர் சொல்லியதில் பயமுறுத்தலோ, தற்புகழ்ச்சியோ கிடையாது. அவர் சொற்பொழிவு மனதைரியப்படுத்துவதாயிருந்தது. சுலபமாக வெற்றிகள் வருமென்ருவது, சிரமங்களை மறைத்தாவது பேசவில்லை. சென்ற சில மாதங்களில் ஏற்பட்ட வெற்றிகளைப் பற்றி, அதாவது டன்கர்க்குக்குப் பிறகு பிரிடிஷ் சைன்யத்தைத் திருப்பி அமைத்தது, இப்பொழுது வெளிப்படையாய்த் தெரிகிற ஹிட்லர் போட்ட இங்கிலாந்து-படையெடுப்பு வீணானது, மின்னல்-விமான எதிர்ப்பை பிரிடிஷ் மக்கள் பயப்படாது தாங்கியது, மத்திய-கீழ்-பிரதேசத்தில் சைன்யங்களைத் திரட்டியது விஷயங்களைப்பற்றி அடக்கமாய், நிதானமாய்ச் சொல்லிவிட்டு, பிறகு, இனி எதிர்பார்க்க வேண்டிய அபாயங்களைப்பற்றி தடஸ்தமாய் எடுத்துரைத்தார்.

பிரிடனிடத்தில் இவருக்கிருக்கும் அபிமானம் சொல்ல முடியாது. அதன் நீண்ட புகழ்பெற்ற சரித்திரத்தில் இதுவரையில் இவ்விதமான ஆபத்து ஏற்பட்டதில்லை. இந்தச் சமயத்தில் தலைமை வகிக்கும் பொறுப்புக்குத் தகுந்தபடி மிஸ்டர் சர்ச்சில் கடுமையாகச் சில வார்த்தைகள் பேசும்படி நேரிட்டது. சென்ற இரண்டு மாதங்களாக ஆகாய மார்க்கமாய்க் கொள்ளைக்காரர்கள் வந்து நிராயுதபாணியான பொதுஜனங்களை இம்சிக்கிறார்கள். பிரிடனுடைய ஜீவ-தாரைகளோடும் கடல்-வழிகளில் வேறு சில கொள்ளைக்காரர்கள் ஆபத்துக்களை விளைவிக்கிருர்கள். வெகுதூரங்களிலிருக்கும் தற்காப்புக்களையும், போக்கு-வரத்துக்களையும் சைன்யங்களாலும், சாதுர்யத்தாலும், சூதாலும், சூழ்ச்சியாலும் எதிரிகள்

கெடுக்கப் பார்க்கிருர்கள். ஜெர்மனியாலும், இதாலியாலும் இப்பொழுது பிரிடனுக்கேற்பட்டிருப்பது போல் இதுவரையில் வேறு ஒரு தேசத்துக்கும் ஏற்பட்டதில்லை; அதை பிரிடன் பிடிவாதத்தோடும், தைர்யத்தோடும், போராடுவதுபோல் மற்ருெருவரும் போராடியதில்லை.

அதற்காக, மிஸ்டர் சர்ச்சில் பயந்துகொண்டு புலம்பவுமில்லை; அதை மறைத்துத் தற்புகழ்ச்சி செய்துகொள்ளவுமில்லை. ஆனல் அழுத்தமான வார்த்தைகளைச் சொன்னர். நீர்-மூழ்கிகளால் அதிகரித்துவரும் சேதத்தைப்பற்றிச் சொல்லும் போது மட்டும் சற்றுக் கடிந்து பேசநேரிட்டது. "நம்முடைய விமானங்களும், கப்பல்களும், அயர்லாண்டின் தெற்கு, மேற்குக்கரைகளில் எண்ணெய்க் கரி எடுத்துக்கொள்ள முடியாமல், அயர்லாண்டுக்கும், நமக்கும் உயிர் நிலையான வியாபாரம் பாதுகாக்கமுடியாதது நமக்கு ஒரு பெரிய பாரமாய்த்தானிருக்கிறது. எதையும் தாங்கக்கூடிய பலம் நமக்கிருந்தாலும் இந்த பாரத்தை இப்பொழுது நம்மேல் ஏற்றியிருக்கக்கூடாது" என்று சொன்னர். எதிரிகள் நடுநிலை நாடுகளுக்குச் செய்யும் அட்டூழியம் தெரிந்ததே. இந்தச் சமயத்தில் பொறுமையே உருவெடுத்து வந்த சர்ச்சில் பேசிய வசைச்சொல் அயர்லாண்டு அதிகாரியான வலீராவைத் தவிர மற்றெவருடைய மனச்சாக்ஷியையும் துளைத்திருக்கும். ஆனல் வலீரா மனதில் இது படவில்லை.

இம்மாதிரியாக, சென்ற, வருங்கால சமாசாரங்களையும், ஆபத்துக்களையும் பற்றிச் சொல்லிவிட்டு, பிறகு, வெற்றிக்குச் செய்யவேண்டிய பிரயத்தனங்களைப் பற்றிப்பேசினர். பிரிடனிலும், கானடாவிலும், ஆஸ்திரேலியாவிலும், நியூ-ஸிலாண்டிலும், தென்-ஆபிரிக்காவிலும், இந்தியாவிலும் பெரிய சைன்யங்கள், வெகு சீக்கிரத்தில் படையெடுக்கும் விதமாய், தயாரிக்கப்பட்டு வருகின்றன-யுத்தக் கப்பல்கள் புதிதாய்க் கட்டப்படுகின்றன. கடலில் வியாபாரக் கப்பல்களை எதிர்ப்பு அதிகப்பட்டிருப்பதைத் தடுக்க அபாரமான ஏற்பாடுகள் நடக்கின்றன. விமான எதிர்ப்புகளுக்குப் பயப்படாது பிரிடிஷ் தொழிலாளிகள் விமானங்களைக் கட்டுகிருர்கள். ஸாம்ராஜ்யத்தின் இதர இடங்களிலும், யுனைடெட்-ஸ்டேட்ஸிலும் விமானங்கள் கட்டப்படுகின்றன. இதனல் எதிரிக்குச் சமானமான விமானப்படை பிரிடனுக்குக் கிட்டிவிட்டது. இதிலிருந்து எதிரியைவிட அதிக விமானங்களும் ஏற்படப்போகின்றன. இதைப்பற்றிப் பேசும்போது மிஸ்டர் சர்ச்சில், 'எதிரியானவன் தன் முழுபலத்தையும்கொண்டு, முழு ஆத்திரத்தோடு, நம்மை எதிர்க்கிருன்' என்ருர்.

நாகரீகம் படைத்த உலகம் புகழவும், இதாலியும், ஜெர்மனியும் நடுங்கவும், யுத்தம் செய்யும் கிரீஸ் சம்பந்தமாய், 'நம்மால் முடிந்த உதவியெல்லாம் செய்வோம்' என்ருர். கிரீட் தீவை சுவாதீனப்படுத்திக்கொண்டு, தென்-இதாலியிலிருக்கும் ராணுவ நிலயங்களையும், நகரங்களையும் எதிர்ப்பதைப்பற்றிச் சொன்னதைத் தவிர கிரீஸுக்கு உதவி செய்ய நடக்கும் மற்ற காரியங்களைப்பற்றி பிரஸ்தாபம் செய்யவில்லை.

மிஸ்டர் சர்ச்சில் தீரமே தீரம். நெடுநாள் யுத்தத்துக்குத் தயாராயிருக்கிறார். இவருக்கு அடுத்த படியாய் யுத்த-மந்திரி-சபையில் நிற்கும் மிஸ்டர் பெவினுடைய வார்த்தைகள் நீண்ட யுத்தத்தில் வெற்றி பெறலாமென்ற தைரியத்தைக் கொடுக்கின்றன. "இன்னும் ஆறுமாத காலத்துக்குள் கடுமையாய் உழைத்து ஜெர்மனியைவிட அதிகமாக விமானங்களைக்கட்டி, கோர-நாஸி-அரசைத் தொலைத்து விடுகிறேன்" என்று மிஸ்டர் பெவின் சபதம் கூறுகிறார். மிஸ்டர் சர்ச்சிலோ அதேவிஷயத்தை, சாதாரண வார்த்தைகளைக்கொண்டு, 'இன்னும் ஒரு வருஷமோ, அல்லது 1942, 1943-லும் கூடவோ சண்டை செய்வோம்' என்கிறார். மிஸ்டர் சர்ச்சிலின் தடஸ்த வார்த்தைகள் எதிரிகளின் மனதில் ராமபாணமாய்ப் பாயும். இக்கொடியவர்கள் விரைவில் மின்னல்-எதிர்ப்பைச்செய்து ஜயித்து விடப் பார்த்தார்கள். தாமதப்பட்டுத் தோல்வி வந்துவிடுமென்று இப்பொழுது நடுங்குகிறார்கள்.

(B)

ஹிட்லர்-லவால் சந்திப்பில் அவர்களின் நோக்கங்கள்.

பிரெஞ்சு கடற்படையை எப்படி உபயோகிப்பது.

மேற்கண்டவைகளைக் குறித்து, டேய்லி டெலேக்ராப், பத்திரிகையின் ராஜதந்திர நிருபர் எழுதுகிறார்.

சென்ற சில தினங்களில் ஹிட்லர் பிரான்ஸ் தேசத்து உதவி பிரதம மந்திரி லவாலுடன் மும்மரமாக ஸம்பாஷணை செய்து வருகிறார். ஸ்தூலமாக கவனிப்போர்களுக்கு அந்த சம்பவம் ஐரோப்பாவில் நடக்கும் யுத்தத்திற்கு யாதொரு சம்பந்தமும் இல்லை என்று தோன்றியிருக்கலாம். ஆனால் சூக்ஷ்மமாக கவனித்தால், பிரான்ஸ் தேசத்தில் அமைதியை ஏற்படுத்தவும், ஸ்பெயின் தேசத்துக்கு இம்மஹா யுத்தத்தை பரவச் செய்யவும் வேண்டி, ஹிட்லர் லவால் செய்யும், ஒரு மகத்தான சூழ்ச்சியின் ஒரு பாகமாக மேற்படி சம்பாஷணை ஏற்பட்டு வருகிறது. ஆனால் மேற்படி சூழ்ச்சி சபலமாக நடந்தேறுமென்பது நிச்சயமல்ல. ஏனெனில் அமைதியை உத்தேசித்து, பிரான்ஸ் தேசம் மான ஹானியான ஏற்பாடுகளை ஒத்துக்கொண்டாலும், ஸ்பெயின் தேசம் மறுபடியும் புதிதாக ஒரு சண்டையிலும், அதிலிருந்து ஏற்படும் ஆபத்துக்களிலும் சிக்கிக் கொண்டு விட்டாலும், முடிவில் ஜெர்மனி தேசம் எல்லாவற்றையும் ஜெயித்து விடுமென்பதை பிரான்ஸும், ஸ்பெயினும் நன்கறிவார்கள். ஸ்பெயின் தேசத்து, புதிய அன்னிய இலாகா மந்திரி ஸீனியர் ஸுனர் அவர்கள், தான் மேற்படி உத்தியோகத்தில் அமருவதற்கு முன் பெர்லினுக்குப்போய், நேராடி பல விஷயங்களை அறிந்துள்ளார் என்பது எல்லோரும் அறிந்த விஷயம். நிச்சயமாக

ஜெர்மானியர்கள் யுத்தத்தில் ஜெயித்து விடுவார்கள் என்பதை அவர்களே நம்ப வில்லை என்றும் ஜெயிக்க வேண்டுமென்ற கவலையாவது அவர்களுக்கு இல்லை என்றும், மேலும் நாஸி ஆளுகையில், அவர்கள் மிகவும் துன்பம் அடைந்து, மனம் நொந்து, கலங்கியிருக்கிறார்கள் என்றும், மேற்படி சீனியர் ஸஞோர் நிச்சயமாக அறிந்துகொண்டிருப்பதாயும் கூறப்படுகிறது. இதாலியர்களின் நோக்கமோ, நிச்சயமாக விளங்கவில்லை. பிரகிருத சம்பாஷணையில் ஹிட்லரும், லவாலும், இதாலிய சம்பந்தமான பல விஷயங்கள் பேசித்தான் இருக்க வேண்டும். ஆனாலோ, மேற்படி சம்பாஷணையைப் பற்றி இதாலி தேசத்து பத்திரிகைகளும், ரேடியோவும், யாதொருவிதமான பேச்சே பேசவில்லை.

2. சில விஷயம் தெரிந்தவர்கள் லவாலின் விஷயங்களைப்பற்றி ஒரு விதமான சந்தேகமும் கொள்ளுகிறார்கள். லவாலின் பூர்வ சரித்திரத்தை நோக்குங்கால் அவர் குருவுக்கு மிஞ்சின சிஷ்யனாக விளங்கக்கூடியவர் என்பது தெரிந்த விஷயம். அதே மாதிரி மார்ஷல் பிதேன் உத்தரவுக்கு மீறி ஒருவேளை நடப்பாரோ என்பதும் தோன்றுகிறது.

3. இந்த சூழ்ச்சியில், லவாலும், நார்வே தேசத்து குஸ்லிங் துரைமாதிரி தனக்கும் ஜெர்மனியின் ஆதிக்கத்தின் கீழ், குஸ்லிங் பதவி கிடைக்குமென்று எதிர்பார்க்கிறார்போலும். இப்பொழுது விஷி நிர்வாகத்தில் மார்ஷல் பிதேன் அவர்கள்தான் சர்வாதிகாரி என்பதை லவால் நன்கறிவார். ஆகையால் ஒருக்கால் பிரான்ஸ் தேச நிர்வாஹமும் நார்வே தேசத்தினரது போல் ஆகிவிட்டால், தன்னுடைய கதி அதோகதி என்பதையும், லவால் நன்கறிந்தவர்.

4. எந்நிலைமையிலும், மார்ஷல் பிதேன் தீர்மானத்திற்கு மாறுபாடாக ஜெர்மானியர்கள் சொல்லுகிறபடியெல்லாம், விஷி கவர்ன்மெண்டு நடப்பதாக வந்தாலும், பிரஞ்சு தேசத்துப் படை வீரர்கள் ஒருபொழுதும் ஆங்கிலேயர்களுக்கு விரோதமாகச் சண்டை செய்ய மாட்டார்கள் என்பதை முற்றிலும் நிச்சயமாக நாம் சொல்லலாம்.

5. இதர சூழ்ச்சிகளில் தோல்வியடையப்பட்டு, புதிதாக ஜெர்மானியர்கள் மற்றொரு கல்பனை செய்கிறார்கள் என்று தெரிகிறது. அதாவது ஆகாரம் கொண்டு வரும் கப்பல்களுக்கு பிரெஞ்சு மாலுமிகளைக்கொண்டு, பிரெஞ்சு கப்பல் படைகளை பாதுகாப்புக்கு அனுப்புவது. அப்படிச் செய்வதில் ஆங்கிலேய கப்பல் படைகளுடன் சந்திப்பு ஏற்படலாம். இதைக் கண்டு ஒருவருக் கொருவர் கோபம் அதிகரிக்கலாம். இந்தவிதமாக எல்லாம் ஜெர்மானியர்களுடைய மனப்பான்மை. இப்பொழுது, ஆங்கிலேயர்கள் டாக்கார் துறைமுகத்தில் பிரெஞ்சு கப்பற் படைகளை மிகவும் சுலபமாக அழித்துவிடக் கூடியவர்களாக இருந்தபோதிலும் அவைகளை கௌரவமாக விட்டுவிட்டு அழிக்காமல் திரும்பி வந்ததால், ஓரான் துறைமுகத்தில் பிரெஞ்சு கப்பற் படைகளை ஆங்கிலேயர்கள் அழித்ததினால், பிரஞ்சுக்காரர்களுக்கு ஆங்கிலேயர்கள் பேரில் ஏற்பட்ட கோபமும் தணிந்து விட்டது என்று எனக்கு பிரெஞ்சு கப்பற்படை அதிகாரிகளிடம் இருந்து தகவலும் கிடைத்திருக்கிறது.

(C)

லண்டனில் கீழ்கோடி இந்தியர்கள் எங்கே காபந்து செய்து கொள்ளுகிருர்கள்.

நாஜி வெடி வீச்சுகளைப்பற்றி லஷ்கர்கள் என்ன நினைக்கிருர்கள்.

"இம்மாதிரி ஜபர்தஸ்து இந்த ஜனங்களை பயமுறுத்த முடியாது".

திரு. டி. ஏ. ராமன்.

"ஹிந்துஸ்தான் டயம்ஸ்" பத்திரிகையின் லண்டன் நிருபர் எழுதுகிறர்.

லண்டன் நகரில் கீழ் கோடி வாஸிகள் இரவில் ஒரு பெரிய கிடங்கில் மறைந்து கொள்ளுகிருர்கள். முன் சாமான் குவித்து வைக்கப்பட்டு வண்டிகள் சத்தம் செய்து நுழைந்து கொண்டிருந்த கிடங்கு இப்பொழுது மனிதர்களால் நிறம்பியிருக்கிறது. ஒரு மந்தமான வெளிச்சமும் ஏராளமான சத்தமும் கொண்ட இந்த இடத்தை ஒரு இங்லீஷ்காரர் கீழ் நாடுகளிலிருக்கும் கடைத்தெருவென்று மனத்தில் நினைத்துக்கொள்ளக்கூடிய வண்ணமாக யிருந்தது. ஆகையால் அங்கு லண்டனில் கீழ் கோடியிலுள்ள இந்தியர்கள் இரவுகளைக்கழிப்பது பொறுத்தமே.

மூன்று வாரங்களுக்கு முன் நான் அதை முதலில் பார்த்தபோது அது ஈரமாகவும் அழுக்கடர்ந்துமிருந்தது. லண்டனில் வாஸயோக்கியமான மறைவிடங்கள் ஏற்படுத்திக்கொடுக்கும் திட்டப்படி, அந்த இடமும் வாஸயோக்யமாகச் செய்யப்பட்டிருக்கிறது.

நான் கடைசியாகச் சென்றபோது வெகு சாமர்த்தியம் வாய்ந்த போலீஸ் பெண்கள் பொறுமையாக மத்தியஸ்தம் செய்துகொண்டிருந்தார்கள். அதிலிருந்த சாமான்களை அப்புறப்படுத்திவிட்டார்கள். தூங்குவதற்கு வேண்டிய வசதிகள் செய்யப்பட்டன. நூற்றுக்கணக்கான விளக்குகள் இருளைப்போக்கடித்தன.

அந்த இடம் வெகு சாவதானமானது. 30 அடி கனமுள்ள காங்கரீட்டு எவ்வளவு ஸாவதானம் கொடுக்கமுடியுமோ அவ்வளவுள்ளது. அதற்குள் சென்ருல் ஒரு கோப்பை "கரம் சா" அல்லது சில பென்ஸு (அணு)க்களுக்கு ஒரு இந்தியச் சாப்பாடு பெறலாம். எல்லாரும் சேர்ந்திருப்பதில் ஒரு ஸாவதான உணர்ச்சியிருக்கிறது. ஹிந்துஸ்தானி பேசுவதில் ஒரு ஸௌக்கியம் இருக்கிறது. அந்த இடத்திலுள்ள 17-வது, 18-வது வளைவில், ஒவ்வொரு இரவும் எல்லாச் செய்திகளும், வம்புகளும் ஒருவருக்கொருவர் மாற்றிக்கொள்ளுவார்கள். தூக்குக் கடைக்காரர்கள் தூக்குக்கடைக்காரர்கள்தான். அதில் ஒருவன் "மல்லிகை அத்தர்" வியாபாரம் ரகஸ்யமாகச்செய்ய ஆரம்பித்தான். ஒரு லஷ்கர் குறி சொல்லக் கிளம்பினன். பக்கத்திலிருந்த போலீஸ்காரனைக்கண்டு பயப்படாமல் ரேகை பார்த்துச் சொல்லிக்கொண்டிருந்தான்.

கீழ்க்கோடியிலிருந்த இந்திய ஜனம் வெகு குறைந்துவிட்டது. தூக்குக் கடைக்காரர்கள், ஒத்தைக் கடைக்காரர்கள், சதா வந்துபோய்க்கொண்டிருக்கும் மாலுமிகள் இவைகளைச் சேர்த்து, இப்பொழுது முந்நூறு, நானூறுக்குமேல் இல்லை. லஸ்கர்கள் ஒரு கப்பலிலிறங்கி, மறு கப்பலேறும்வரை வெகு தமாஷாக இருக்கிறார்கள். ஆனால், சீக்கிரம் திரும்பிப்போகவேணுமென்ற அவாவுடனிருக்கிறார்கள். லஸ்கர்களின் க்ஷேமாதிகாரியென்று புதிதாக நியமிக்கப்பட்டவரும், "ஐம்பது லஸ்கர்களுக்குமேல் லண்டனில் இல்லை" என்று சொல்லுகிறார். அவர்களும் சீக்கிரம் ஒரு கப்பலில் சேர்ந்துவிடுவார்கள் என்றும் சொன்னார்.

தெருச் சந்தைகளும், தனிச் சந்தைகளும் இல்லாமல் போகவே, சில தூக்குக்கடைக்காரர்கள் மிட்லாண்ட்ஸில் தொழிற்சாலையில், ரஸ்தாக்களில், அல்லது கட்டடங்களில் வேலைசெய்ய வெளியேறிவிட்டார்கள்.

சிலர் ஒருவாரத்திற்கு ஒரு பவுன் வரை சம்பளம் பெற்றுக்கொண்டு, வெடி சாலைகளில் வேலை செய்துகொண்டிருக்கிறார்கள். சிலர் இந்திய முன் வேலைப் படையில் சேர்ந்திருக்கிறார்கள். வேறு சிலர் முதல் உதவி பரீக்ஷையில் தேர்ந்து, உதவி வேலையில் அமர்ந்திருக்கிறார்கள்.

எவ்வாறு அவர்கள் பொறுத்துக்கொள்ளுகிறார்கள்? கீழ்க்கோடியில் ஸெப்டம்பர்ௗ 7௳ முதல் 9௳ வரையிலுள்ள விமானக்கூட்டத் தாக்கல்கள் அவர்களுக்குத் திகிலையும், கவலையையும் உண்டாக்கத்தான் உண்டாக்கிற்று. சுற்றுமுற்றும் தீ எரிந்தது. அக்கம்பக்கம் வீடுகள் இடிந்துகிடந்தன. வீடிழந்தவரும், சுற்றமிழந்தவரும் தெருக்களில் கூடினார்கள்.

கப்பலுடைந்தாலும் தீரத்துடன் நின்றும், தோணி வெடியைப் பொருட்படுத்தாது இருக்கும் அவர்களுக்கு, தூக்கமில்லா இரவுகளும், உண்மை புத்திமதி சொல்லுவோரில்லாமையும் அவர்களுக்கு வெகு ஸகிக்கமுடியாததாக இருந்தது.

ஆயினும் இன்று கீழ் கோடியிலுள்ள மற்றவர்களைப்போல் அவர்களுடைய வாழ்கையும் ஒரு திட்டத்தில் அமர்ந்து விட்டது. இப்பொழுது தூக்கமும், மறைவிடமும் எங்குகிடைக்கும் என்று அவர்களுக்குத் தெரியும். பிற்பகலில் சீக்கிரமாகவே அந்தக் கிடங்குக்கு படுக்கையுடனும் மூட்டைகளுடனும், சபாத்தி சட்ணியடங்கிய எண்ணெய் பசையுள்ள பொட்டணங்களுடனும் ஊர்ந்து செல்வதைக் காணலாம்.

கப்பற்சாலைகளுக்குகருகேயுள்ள ஒரு கூட்டம் அருகேயுள்ள பாலத்திற்குச் சென்று, அவைகளில் இரண்டு வளைவுகளை பிரத்யேகப்படுத்திக்கொண்டார்கள். அது ஒரு நல்ல மறைவிடமாகயிருக்கிறது.

சில லஸ்கர்கள் யாதொரு மறைவிடங்களுக்கும் செல்ல சிரமப்படாமல் வேதாந்தமாகயிருக்கிறார்கள். அப்படிப்பட்ட ஒருவர் ஒரு கடைக்காரர் விட்டு விட்டுப்போன கடையை கவனித்துக்கொண்டிருந்தார். அவருடைய தெருவில்

பல வீடுகள் இடிந்து விழுந்துவிட்டன. சுற்றிலும் கண்ணுடி குவிந்து கிடந்தது. அவனை நான் சந்தித்ததற்கு 10-நிமிஷங்களுக்குமுன்தான் சுமார் 100-கஜங்களுக் கப்பால் ஒரு வெடிவிழுந்திருந்தது. ஆயினும ஒரு பெரிய புன்முறுவலுடன் என்னை வரவேற்ருன்.

"நான் மறைவிடத்திற்குப்போவதில்லை. என் முறைவந்தால் நான் போவேன்."

"நீங்கள் அந்த கப்பற் சாலைகளைப் பார்த்தீர்களா? அங்கு வேலை நிற்கிறதில்லை அதற்கு எதிரிடையாக இரண்டு பங்கு துரிதமாக சாமானை ஏற்றி இறக்குகிருர்கள். ஆகையால் நான் இங்கு தங்குகிறேன்."

பிறகு ஆணை வைத்து ஹிட்லரைப்பற்றிப் பேச ஆரம்பித்தான். அவன் செய்யும் ஜபர்தஸ்து கிழ் கோடியிடம் செல்லாதென்ருன். அந்தக் கிடங்கில் நான் பேசிக்கொண்டிருந்த ஒவ்வொரு இந்தியனும் அவ்வாறே சொன்னுன். இவர்கள் பத்திரிகைகள் வாசிப்பதில்லை. ராஜீயம் தெரியாது. அவர்களுடைய அபிப்பிராயம் அவர்கள் கண்டு, கேட்கும் சங்கதிகளை ஒட்டியது.

இந்த தேசத்தார் ஒரு நாளும் அமுங்கமாட்டார்கள். அவர்கள் ஏன் அமுங்க வேணும்? இம்மாதிரி வெடி வீச்சுகளால் ஹிட்லர் ஜெயிப்பான் என்று நாங்கள் நினைக்கவில்லை. கப்பற்சாலைகள் நடந்துகொண்டிருக்கின்றன. கப்பல்கள் வந்து போய்க்கொண்டிருக்கின்றன. ஜனங்கள் ஜெர்மனியை இன்னும் ஜாஸ்தியாகப் பகைக்கிருர்கள்.

பக்கிங்ஹாம் அரண்மனையின்மேல் வெடி வீசினதைப்பற்றிப் பேசும்போது, "அவன் எவ்வளவு முட்டாளாக இருக்கவேணும். இப்பொழுது தூக்குக்கடைக் காரனும் ராசனும் ஒன்ருகிவிட்டார்கள். எல்லோரும் பழிக்குப்பழி வாங்க நிச்சயம் கொண்டிருக்கிருர்கள்" என்று சொன்னுன்.

அவர்கள் நாஸிக்கொள்கைகளை எவ்வாறு பகைக்கிருர்கள் என்று அடிக்கடி சொல்லுகிருர்கள். இந்த கிழ் கோடி இந்தியர்களுக்கு இந்த யுத்தம் அந்நியர் களுக்குள் நடப்பதாக எண்ணமில்லை. தங்கள் சொந்த காரியமாகவே நினைக்கிருர் கள். ஒவ்வொருவனும் ஜெர்மனியுடன் தீர்த்துக்கொள்ளவேண்டிய பழி இருக் கிறது. ஏனெனில் அவர்களுக்கு நேர்முகமாக யாதொரு நஷ்டமில்லாவிடினும் ஸ்திரீகள் பேரிலும், சிசுக்கள் பேரிலும் வெடி வீசும் காட்டுமிருண்டித்தனத்தை கண்டு அவர்களுடைய மனம் கொதிக்கிறது.

அவர்களுடைய இறக்கம் எல்லோரையும் கவரக்கூடியதாக இருக்கிறது. ஒரு ஒத்தைக் கடைக்காரன் "இந்த மனிதனைப் பாருங்கள். அவனுக்கு இந்திய ஸாமான்களில் நல்ல வியாபாரம் நடந்து கொண்டிருந்தது—கரிப்பொடி, ரத்தின கம்பளம், வாசனை திரவியங்கள் இவைகளில், நேற்று இரவு அந்த 200 பவுன் பொறுமதியுள்ள சாமானும் வெடித்து நொருங்கிவிட்டது". நான் அந்த மனிதனுக்கு தேறுதல் சொன்னேன். "நேரான குறி—என் காலம்" என்று பதில் சொன்னுன்.

வேறு இந்தியருக்கு இம்மாதிரி நஷ்டம் ஏற்பட்டதாவென்று அவனைக் கேட்டேன். பல கடைகள் அவ்வாறு வெடி வீச்சுக்கு இரையாயினவென்றான்.

"அவர்கள் எல்லாம் இந்தியர்களா," என்றேன். என்மேல் வெகு மூர்க்கமாக கோபக்குறிகளைக் காட்டிக் கொண்டு என் பக்கம் திரும்பி "ஏன் சதா இந்தியர்களைப்பற்றியே கேட்கிறீர்கள்? எங்களைப் போலத்தான் மற்றவர்களும் துன்பப் படுகிறார்கள். எங்களைப்போல் அவர்களும் ஏழைகள்" என்றான். "வெடிகள் இந்தியர்களுக்கும் ஆங்கிலருக்கும் வேற்றுமை பாராட்டா".

அங்கிருந்த கூட்டம் எங்களைச்சுற்றிக் கொண்டு அவன் சொன்னதை ஆமோதித்துத் தலை அசைத்தது. சுற்றிலும் எல்லாருக்கும் ஏற்பட்ட நஷ்டத்தைப் பற்றி அவர்களிடம் பெருகின அனுதாப வசனங்களில் இந்தியர்களின் நஷ்டத்தை மதிக்க நான் செய்த பிரயத்தனங்கள் மூழ்கின.

இந்தியர்களுடைய மனப்பான்மையும் இதரர்களுடையதுபோல் உறுதியாக இருந்ததென்பதோடு, அந்த மறைவிடத்திலிருந்தவர்களுக்குள் வெகு உத்தண்டமான நாசி சத்துருக்கள் அவர்கள்தான் என்ற நிச்சய புத்தியுடன் திரும்பினேன்.

அனுபந்தம் II.

பிரிடிஷ் உருதியைப்பற்றி நாஸி அபிப்ராயம்.
லண்டனிலுள்ள போர்முனை உணர்ச்சி.
அமெரிகா பிரஸிடெண்டின் அர்த்தபுஷ்டியுள்ள வாக்குமூலம்.
நம் யுத்த லக்ஷியங்கள் என்ன.

(திரு. விக்ஹாம் ஸ்டீட் ஒலிபரப்பியது.)

ஆதாயங்கள்.

உலகத்தின் பல பாகங்களில் இவ் வாரம் அநேகம் நடந்திருக்கின்றன. அவைகளுக்குள்ள தாரதம்மியத்துடன் பார்க்கக்கூடியவாறு அவைகளை வகுத்துப் பிரிப்பதுதான் கஷ்டமாகயிருக்கிறது. மத்தியதரைக் கடலில் பல இதாலியக் கப்பல்களுக்குப் பிரிடிஷ் காவற்கப்பல் "ஏஜக்ஸு" கொடுத்த சரியான உதை ஒருபுறம் இருக்கிறது. ஜெர்மனி பேரில் நம் வெடி விமானங்கள் விடுத்த குண்டு வீச்சுகளும், பிரான்ஸைச் சேர்ந்த ஷெர்பேரைச், டன்கர்க் முதலிய துறைமுகங்களை நம்கடற்படை நொருக்கினதும் மற்றொருபுறம் இருக்கிறது.

ராணுவ தளவாடங்கள் சைனாவுக்குப் போகக்கூடியவாறு பர்மா பாதையும் திறந்தாய்விட்டது மேற்கு குணகோளத்தைக் காப்பதென்றால், ஐக்கிய ஸமஸ்தானங்கள் அட்லாண்டிக் ஸமுத்திரத்தையும், பஸிபிக் சமுத்திரத்தையும் சமாதான முறையில் உபயோகிக்கக்கூடிய பாத்தியமும் உட்பட்டிருக்கிறது என்று ரூஸ்வெல்ட் தலைவர் சொல்லியிருக்கிறார்.

பத்துவழிகள்.

நம்முடைய வாராந்திர ஐந்துகையில் பத்துவழியாக எழுதவேண்டிய இனம் என்னவென்றால், லண்டன்பேரில் இரவில் ஏற்பட்ட சில தீவிர விமான வெடி வீச்சுகளே. பேர்லின், ரோம் நகரங்களுக்குச் சென்று ஸமீபத்தில் திரும்பி வந்த திரு ஸுனெர் என்பவரை ஸ்பெயினில் அயல்நாட்டு மந்திரியாக நியமித்திருப்பதையும் பத்துவழியாகப் பாவிக்கலாம். ஸிரியாவில் வெகு நேர்த்தியான பிரெஞ்சு சேனையாகயிருந்து வந்ததும், கொஞ்சம் கொஞ்சமாகக் கலைக்கப்பட்டுவருவதாகக் கேள்விப்படுகிறோம். பலங்கொண்ட ஜெர்மானிய அல்லது இதாலிய தாக்குதலுக்கோ, வற்புறுத்துதலுக்கோ யுகோஸ்லாவியாவும், கிரீஸும் உட்பட்டுவிடுமோ என்று ஒரு சந்தேகமிருக்கிறது. (இது கிரீஸ் தேசத்தின்மேல் படையெடுத்ததற்குமுன் எழுதப்பட்டது.)

இந்தப் பத்து வரவு இனங்களை வைத்து எவ்வாறு ஐந்துகைபோடுவது? கீழ் பிராந்தியங்களிலுள்ள தேசங்களில் சத்துரு முன்னேறித் தாக்க ஆரம்பித்தால், லண்டன் நகரின்மேல் வெடி வீசுவது கேவலம் பக்கவேடிக்கையாகயிருக்குமென்று ஒரு ஆங்கில ஆசிரியர் சொன்னார்.

உலகத்தில் தீர்மானமான யுத்தங்களில் சென்ற வேனிற்காலத்தில் ஜெர்மானிய விமானத் தாக்குதல்களை பிரிடிஷார் எதிர்த்து முறியடித்ததே பெரிய யுத்தமாகக் கருதப்படவேண்டும் என்று ஒரு பிரசித்திபெற்ற ஆசிரியர் விவஹரிக்கிறார்.

இந்த இரண்டு நோக்கங்களில் பின் சொன்னதுதான் யுக்தமானது என்று

நினைக்கிறேன். அதற்குக் காரணங்கள் ராணுவத்தையாவது, தந்திரங்களையாவது ஒட்டியதல்ல. மனோநிலையைக் காட்டக்கூடியதாகயிருக்கிறது. "பிரிடன் யுத்த"மானது இன்னும் தீர்மானமான யுத்தமாக யில்லாமலிருக்கலாம். ஆனால் அது நம்முடைய விமானிகளிடமிருந்தும் சாதாரணமான பிரிடிஷ்காரனிடமிருந்தும்—லண்டன் பட்டணத்தானைப்பற்றிக் கேட்கவேண்டியதில்லை.—வெளியாக்கப்பட்ட குணங்களைப்பார்த்தால், இதே குணங்கள்தான் யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவருவதோடு நமக்கு வெற்றியுடன் முடிவு செய்யும் என்று எனக்குத் தோன்றுகிறது.

டாக்டர் கோயபல்ஸுடைய வியாக்யானம்.

டாக்டர் கோயபல்ஸ் இந்த அபிப்பிராயத்தை முழுவதும் ஏற்றுக்கொள்ளவில்லை என்று எனக்குத்தெரியும். நாஸி உண்மைகளைப் பக்குவம் செய்துதரும் அப்பெரியார் வாக்குக்கு மறுவாக்குச் சொல்லவேண்டியிருக்கிறதேயென்று வருந்துகிறேன். நம்முடைய குணாதிசயங்களை அவர் சரியாகத் தெரிந்துகொள்ளவில்லையென்று அவருக்குரிய மரியாதையுடன் சொல்லத்துணிகிறேன்.

"சொல்பமான ஆகாரத்துடனும், இருக்க இடமின்றி, உறக்கமின்றி, வீசும் ஜ்வாலைகளுக்கும், அசையும் குட்டிச் சுவர்களுக்கும் மத்தியில், பொழியும் குண்டு மாரிகளுக்கு மத்தியில், லண்டன் நகரத்தார் வாழ்க்கை நடத்துகிறார்கள் என்றால், இது பட்டணத்தானின் உறுதியல்ல. இது விஷயம் வேறு" என்று டாக்டர் கோயபல்ஸுடைய பத்திரிகைகளில் ஒன்று சொல்லுகிறது.

இங்கிலாந்து தேசம் ஒரு தீவிரமான களிப்புடன் மரணத்தினருகே செல்லுகிறதென்றும், யுத்தத்தின் ஒவ்வொரு கட்டங்களை ருசியுடன் அனுபவிக்கிறதென்றும், ஒவ்வொரு தோல்வியையும், ஹீனத்தையும் வெகு இஷ்டத்துடன் பொறுத்துக்கொள்ளுகிறதென்றும், எல்லாம் தான் சாகும்போது சத்துருவையும் பாதாளத்திற்கு இழுத்துக்கொண்டு செல்லவேண்டும் என்கிற ஆசையால்தான் என்றும் டாக்டர் கோயபல்ஸ் உறுதி சொல்லுகிறார். அதுதான் பிரிடிஷ் உறுதி, பொறுமை, இவைகளின் பரம ரஹஸ்யம்.

சாவில் பரவசமான களிப்பில்லை.

நான் லண்டன் பட்டணத்தில் பிறந்து வளர்ந்த பட்டணத்தான் அல்ல. நான் ஸ்வல்பமாக முப்பது வருஷம் வரை லண்டனிலிருந்திருக்கிறேன். சென்ற வாரம் என்னுடன் லண்டனிலிருந்தவர்களையும் கொஞ்சம் பார்த்திருக்கிறேன். இறந்துபோவோம் என்று சந்தோஷப்படுகிறவர்களை நான் பார்க்கவில்லை. அவர்கள் அவ்வளவு ஜீவனிழந்தவர்கள் அல்ல.

நான் கண்ட உணர்ச்சி வேறுவிதமானது. லண்டனில் எப்பொழுதும் நாமிருந்தால் நமக்கு அது வெளிப்படத் தெரியாது. அது அவ்வளவும் பொதுவானது. அவ்வுணர்ச்சி வெகு சாதாரணமாகையால், அதைப்பற்றி நினைக்கவோ பேசவோ இடமில்லை. ஆயினும் சாந்தம் நிறைந்த கிராமாந்தரங்களுக்கு நான் சென்றவாரம் போனதுபோல் போனால், அங்கு ஒவ்வொருவரும் வெகு அக்கறையுடன் "என்ன, நான்கு ஐந்து மைல்களுக்கப்பால் ஒரு வெடி

விழுந்ததா, விழவில்லையா" என்றெல்லாம் பேசிக்கொண்டிருப்பதைக்கேட்டுவிட்டு லண்டனுக்குத் திரும்பினால், ஒரு போர் முனைக்குத் திரும்பினது போல் தோன்றும். அதுதான் போர் முனை உணர்ச்சி. ஹிட்லர் செய்யும் எவ்வித அட்டூழியத்தையும் தின பஞ்சாங்கமாக எடுத்துக்கொண்டு லண்டன் பட்டணத்தானை நிற்கச்செய்வது அவ்வுணர்ச்சியே.

போர்முனை உணர்ச்சி.

போர் முனையில் யுத்தகாலத்தில் எவரும் அடிபடலாம். ராமன் துரதிருஷ்டசாலியாகயிருக்கலாம். கிருஷ்ணன் அதிர்ஷ்டசாலியாகயிருக்கலாம். கோவிந்தன் ஒரு மயிரிழையில் தப்பியிருக்கலாம். முக்கியமான விஷயம் என்னவென்றால், அணியானது நிலை நின்று திருப்பியடிக்கவேண்டுமென்பதே. இம்மனோ நிலையுடன் லண்டன் அணியை நிலைநிறுத்தியிருக்கிறது. ஹிட்லர், கோயரிங், கோயபல்ஸ் இன்னும் எல்லா நாஸிகளும் நிற்கமுடியாமல் விழுங்காலம் வரும்வரை அம்மனோநிலையில் நிற்கும்.

அக்காலமும் வரும். தேதி குறிப்பிட யாவராலும் முடியாது. சற்று மனக்கண்ணால் நோக்கினால் அக்காலத்தின் சின்னங்களையறியலாம். ஆம்ஸ்டர்டாம் நகரிலிருந்து பிரஸ்டு நகரம் வரையிலுள்ள பிரெஞ்சு, பெல்ஜியம், டச்சுக் கரையிலுள்ள ஜனங்களையும், துருப்புக்களையும் நாம் ரகஸ்யமாகக் கவனித்துச்சென்று, ஜெர்மானியர் அவர்களுக்குள் என்ன சொல்லிக்கொள்ளுகிறார்களென்றும், டச்சுக்காரரும், பெல்ஜியமும், பிரெஞ்சுக்காரரும் என்ன சொல்லிக்கொள்ளுகிறார்கள் என்றும் கவனித்தால் ஜெர்மானியர் அளவுக்கு மேல் எடுத்துக்கொண்டு விழிக்கிறார்கள் என்ற நுட்பமான விஷயம் நமக்குத் தெரியவரும்.

நம்மால் படையெடுக்கப்பட்டு துறை முகங்களில் நேர்ந்த நஷ்டங்கள்.

இந்த வாரம் நம் கடற்படையும், விமானப்படையும் ஷெர்போர்க் என்ற துறைமுகத்தில் மட்டும் வெடி வீசியதில் சுமார் 40,000-முதல் 50,000-த்துக்குள் ஜெர்மன் துருப்புகள் கொல்லப்பட்டன; அல்லது காயப்படுத்தப் பட்டனவென்ற மதிப்பானது ஒருக்கால் சரியில்லாமலிருக்கலாம். தெற்கே போர்டோ துறைமுகத்து ஆஸ்பத்திரிக்கு 12,000 காயமடைந்த ஜெர்மானிய துருப்புகள் அனுப்பப்பட்டார்கள் என்றும், பாரிஸ் நகரத்துக்கு சுமார் 7,000 அனுப்பப்பட்டார்கள் என்றும் வந்திருக்கும் செய்தியை உறுதிசெய்யும் தகவல் என்னிடமில்லை.

ஆனால் ஹிட்லரின் கப்பல்களிலும், பரிசல்களிலும், இங்கிலாந்தைப் படையெடுக்க வைக்கப்பட்டிருந்த துருப்புகள் வெகு பயங்கரமாக நாசமாக்கப் பட்டார்கள் என்று எனக்கு நிச்சயமாகத் தெரியும். நம்மைப் படையெடுக்கப்போவதாகச் சொன்னவர்களுக்கு நாமிழைத்திருக்கும் ராணுவச் சேதங்களில், இவ்வாரம் லண்டனில் நெருக்கமாக விழுந்த ஜெர்மன் வெடிகுண்டுகளால் ஏற்பட்ட பொது மனிதரின் நஷ்டங்கள் ஒரு சிறிய அளவுகூட இல்லை.

ஜெர்மானிய எண்ணெய்ச் சாலைகள், யுத்தத் தொழிற்சாலைகள், யந்திரசாலைகள், ரயில்வேக்கள் இவைகளில் விழுந்த நம்முடைய குண்டுகளால் பொது மனிதருக்கும் சேதம் ஏற்பட்டதென்று டாக்டர் கோயபல்ஸ் உரக்கக் கத்து

கிறார். அவர் நன்றாக உரக்கக் கத்தட்டும்.

அவருக்கு பொது மனிதரின் சேதத்தால் கவலையில்லை. ஜெர்மானியச் சரக்குகளும், யுத்தத்துக்கு ஆதாரமானவைகளும் நாசம் செய்யப்படுவதில் அவருக்குக் கவலை. ஸாம்ராஜ்ய விமானப்பயிற்சித் திட்டமும், ஐக்கிய ஸமஸ்தானங்களின் நட்பும், நல்லெண்ணமும், நமக்குக் கணக்கற்ற வழிகளில் கணக்கற்ற அளவுக்கு வரும் மாதங்களில் உதவியளிக்கும் என்றும், அதனால் இப்பொழுது நாம் செய்யும் வேலை வெகு சொற்பமானது என்றும் டாக்டர் கோயபல்ஸுக்கு நன்றாகத் தெரியும்.

நான் கொடுத்த எச்சரிக்கையைத் தானே மறக்கிறான் ஹிட்லர்.

நேற்றுத்தான் ஹிட்லரின் "மைன் காம்ப்" என்ற புத்தகத்தில் ஒரு கட்டம் வாசித்தேன். அதில் அவன் ஜெர்மானியர்களைப் பின்வருமாறு எச்சரிக்கை செய்திருக்கிறான். "அலக்ஸாண்டர் மஹானைப்போல் நாமும் ஐரோப்பாவுக்கு அந்நியமான கிழக்குப் பிரதேசங்களிலும் அதற்கப்பாலுள்ள கிழக்குப் பிரதேசங்களிலும் நாம் வியாபிக்கவேண்டுமென்ற உபயோகமற்ற எண்ணங்கொள்ளவேகூடாது என்றும், ஆனால் ஐரோப்பாவின் மத்தியில் ஜெர்மானிய ராஜ்யத்தை விஸ்தரித்து ஸ்தாபித்துக் கொள்ளுவதே நம்முடைய லக்ஷியமாக மனதில் கொள்ளவேண்டும்" என்று.

ஆயினும், இப்பொழுது கீழ் பிரதேசங்களில் பிரவேசிக்க அலக்ஸாண்டர் மஹானைப்போல் பிரயத்தனப்படுகிறான். அதே சமயத்தில் பிரிடிஷ் விமானப்படையும், போலந்து, ஜெக், டச்சு, அமெரிக்க விமான வீரர்களுடன் ஜெர்மனியின் மத்திய பிரதேசங்களை நாசம் செய்துகொண்டிருக்கின்றன. இன்னும் நாம் வெகுதொலை போகவேண்டியிருக்கிறது. ஆயினும் சரியான ரஸ்தாவில் போய்க்கொண்டிருக்கிறோம்.

போர்முனையிலுள்ள ஸம்பவங்கள் ஒருபுறமிருக்க, என்னுடைய சொந்த உத்தியோகப்பற்றேயில்லாத அபிப்பிராயத்தில் இரண்டு வெகு முக்கியமான விஷயங்களிருக்கின்றன. ஒன்று, அமெரிக்காவில் இதற்குமுன் நடந்திராதஸம்பவமாக 160 லக்ஷம் சேனையை ஐக்கிய ஸமஸ்தானங்கள் போரில் சேராத காலத்தில் நிராக்ஷேபணையாய் திரட்டிக்கொண்டிருக்கிறதென்பது.

ரூஸ்வெல்டுடைய வசனங்கள்.

மற்றொன்று, ரூஸ்வெல்டு தலைவருடைய பின்வரும் வசனங்களுக்குள்ளிருக்கும் கருத்து. "நமக்கு முன்னாலிருக்கும் வழியை ஐரோப்பாவிலோ, ஆசியாவிலோ இருக்கும் ஸ்வேச்சாதிகார தேசங்களின் கூட்டும் தடுக்க முடியாது. கடைசியாக மிஞ்சின சுதந்தர ஜனங்களாகயிருந்துகொண்டு, சுதந்திரத்தின் சத்துருக்களை மேலெழாமல் நிறுத்திவைத்துக்கொண்டிருப்பவர்களுக்கு நான் அளிக்கும் உதவியை அவர்கள் தடுக்கமுடியாது. சுதந்தரங்கொண்டோர் தங்களுக்கு நியாயமாகத் தோன்றுவதைக் காப்பாற்றுவதற்காக எவ்வாறு எதிர்த்து நிற்பார்கள் என்று பிரிடிஷ் ஆண் பெண் யாவரும் நிதர்சனம் செய்திருக்கிறார்கள். அவர்களுடைய வீரம்செறிந்த போராட்டமும் சாசுவதமாகப்பதியப்பெறும் சோதனை காலம் வந்தால், பொறுப்பாக்ஷி எத்தகைய உறுதிவாய்ந்தது என்று காட்டுவ

தற்கான சாசுவதமான ருஜுவை உலகத்துக்குத் தந்திருக்கிறது."

அவ்வசனங்களும் அவைக்குள்ளிருக்கும் கருத்தெல்லாம் ஹிட்லருடைய காதுகளிலும், அவனுடைய கூட்டுக் கொள்ளைக்காரர்களுடைய காதுகளிலும், சாவுமணியாகக் கேட்காவிடில் அவர்களுக்குக் காது கேட்கவில்லை என்று சொல்லவேண்டும்.

யுத்த லக்ஷியங்கள்.

ஏற்கனவே பிரசுரிக்கப்பட்ட வெகு ஜாக்ரதையாக அமைக்கப்பட்ட பொதுவான வாக்கியங்களை விட, உத்தியோக முறையில் யுத்த லக்ஷியங்களைப்பற்றி வேறு வாக்குறுதிகள் சொல்லமுடியாதென்று காமன்ஸ் ஸபையில் 15-உயில் பிரதம மந்திரி சொன்னார். மேலும், யுத்தத்திற்கு முன்னிருந்த நிலையை நிலைநிறுத்த இந்த யுத்தத்தை நடத்துவதாக ஒருவரும் நினைக்கவில்லையென்றும், மற்ற விஷயங்களோடு நாம் மீளுவதற்காக இச்சண்டை செய்கிறோம் என்றும் சொன்னார்.

மேலும், மந்திரியவர்கள் சொன்னார்:—

"மேற்சொன்ன காரியத்தை நாம் செய்ய சக்தியுள்ளவர்கள் என்று பொது உலகத்துக்குத் தெரிந்தால், நம்மிடமிருக்கும் தீர்மான புத்தி விருத்தியானால், நமக்கு வெற்றிகிடைத்தமேல் நாம் என்னசெய்வோம் என்று மேல்கொண்டு யோசிக்கலாம்."

நம்முடைய யுத்தலக்ஷியங்களைப் பற்றிய விவரமான வாக்குமூலம் சொல்ல மந்திரியவர்கள் மறுத்தது பிசகென்றும், "கொள்கைத் தந்திரங்களை" ஆரம்பிக்க மனமின்மையைக் காட்டுகிறார் என்றும் சிலர் கண்டிக்கிறார்கள். அக்கண்டனம் தகுதியற்றதென்று நினைக்கிறேன்.

பிரதம மந்திரியவர்கள் தைரியமான கொள்கைகளைக்கண்டு பயப்படுகிறவர் அல்ல. நிர்மாண மனோபாவத்தில் குறைந்தவரல்ல. எந்தக் காலத்தில் எதைச் சொல்லவேணும்; அல்லது சொல்லமுடியும் என்பதைப்பற்றி முடிவுசெய்ய அவரே தகுதியுள்ளவர். நான் சொல்லும் கண்டனம் அவர் சொன்னதைப்பற்றியல்ல. ஜெர்மானியர், பொதுநிலை பிரசாரகர்கள், அச்சொல்லை முறுக்குவதைப்பற்றித்தான்.

திரு. சர்ச்சில் அவர்களைப்பற்றி நடப்புக்கு விரோதமான சொற்கள்.

இங்கிலாந்து தன்னுயிரைக் காப்பாற்றிக்கொள்ளுவதற்காகச் சண்டை செய்துகொண்டிருக்குமளவில் தன் யுத்தலக்ஷியங்களைச் சொல்லமுடியவில்லை என்று ஒரு ஒலிபரப்பு நடுநிலை நாட்டிலிருந்து வந்ததைக் கேட்டேன். நம் உயிரை எவ்வளவு சிரமப்பட்டுக் காப்பாற்றிக்கொள்ளலாம் என்ற ஒரு விஷயத்தைத்தவிர வேறு ஒன்றைப் பற்றியும் நாம் நினைக்கமுடியாதபடி அவ்வளவு நிர்ப்பந்தப்படுத்தப்படுகிறோம் என்ற ஒரு தோற்றம் பரவுவதற்காக அவ்வாறு ஒலிபரப்பப்பட்டது. மேற்படி விஷயமும் சாகும்போது சத்துருவையும் பாதாளத்திற்குள்ளிழுத்துக்கொண்டு விழுவதாயிருந்தால், நாம் அதற்கு இஷ்டப்படுவோம் என்று டாக்டர் கோயபல்ஸ் சொன்னதற்கு வேறுபட்டதாகயில்லை.

யுத்தம் வெகு பயங்கரமாகயிருந்தபோதிலும், நம் மனோநிலையைப்பற்றி நம் சத்துருவின் அர்த்த விவரணம் எவ்வளவு சம்பந்தமற்றதாகயிருக்கிறது என்று நினைக்குங்கால் ஹாஸ்யகரமாக இருக்கிறது

நாம் ஒரு காரியம் நிச்சயமாகச் செய்யத் தயாராயில்லை. நம்மோடு பாதாளத்திற்கு சத்துரு ஜனங்களைக் கூட இழுத்துக்கொண்டுபோக விரும்பவில்லை. நாம் பாதாளலோகத்திற்கு வாக்காளர்களாக நிற்கவில்லை.

லௌகிகமும், நெறியும்கொண்ட லக்ஷியங்கள்.

ஒழுக்கமுள்ள சுதந்திரத்திற்கு தாரகம் நாம் தான் என்று நாம் நம்புகிறோம். அவ்வாறே நாம் தெரிந்துகொண்டிருக்கிறோம். அத்தகைய சுதந்திரம் நமக்கும், மற்றும் யாவருக்கும் உறிய நல் உலகிற்கு அடிப்படையாகயிருக்கும். அச்சுதந்திரத்தில் நமக்கு நம்பிக்கையில்லையேல், மற்ற தேசங்களோடு அதைப் பங்கிட்டுக்கொள்ள நாம் விரும்பவில்லையேல், நாம் போர்செய்து நம் சரீரங்களைக் காப்பாற்றி நம் ஆத்மாவை இழப்போம்.

ஸ்தூல லாபங்களைக் கருதாது நாம் செய்த யுத்தம் யதாவது ஒன்று இருந்ததானல் அது இதுவே. மனிதன் வசிக்கும் புவிப் பிரதேசங்களை ஆளுவதைத் தன்னுடன் பங்கிட்டுக்கொள்ளும்படி ஹிட்லர் கேட்டபக்ஷத்தில், "அப்பாலே போ, பைசாசமே" என்று நாம் பதிலளிக்கவேணும்.

ருமேனியாவை உறிஞ்சி, பால்கன் நாடுகளை முகத்தடியில் பூட்டி, வட ஆபிரிக்காவையும், எகிப்து தேசத்தையும் ஜயித்துவிட்டால், இதாலியின் உதவியையும், விஷி ஆஸாமிகளின் (பிரெஞ்சு ஸர்க்கார்) ஒக்குமத்தையும் கொண்டு நம்மை "சரணமடைகிறுயா, நாசமடைகிருயா" என்று கட்டாயப்படுத்துவோமென்று ஹிட்லர் நினைத்துக்கொண்டிருக்கலாம். அப்பொழுதும் "உன்னுலானதைச்செய். நாம் சரண் புகமாட்டோம்" என்று சொல்ல வேண்டும்.

ஆனல் கார்யங்கள் அவ்வாறு நடைபெறவில்லை. ஹிட்லரும், முஸோலினியும், அவர்களுடைய கூட்டுக்கள்ளர்களும் இழைக்கக்கூடிய பெரிய நஷ்டமும் நாம் செய்யக்கூடிய பரம லாபத்துக்கு ஸமதையாகாது. நாம் அடையக்கூடிய பரம லாபம் என்னவென்முல், தீய கொள்கைகளை உண்மை மகிமையுள்ள கொள்கைகளென்று தப்பாக எண்ணிக்கொள்ளும்படி அடித்துக் கட்டாயப்படுத்தப்பட்டுத் தவிக்கும் ஜெர்மானிய, இதாலிய ஜனங்களுக்குக்கூட கடைசியில் விமோசனமளிப்பதே.

பிரதம மந்திரியின் முன்னெச்சரிக்கை.

நாம் இவ்வளவு சௌகரியத்துடன் கம்பீரமான கொள்கைகளுக்குப் போர் செய்துகொண்டிருக்கிறோம் என்ற அடிப்படையான நம்பிக்கையே, நம் லக்ஷியங்களை இன்னும் தெளிவாக விவரணம் செய்யவேண்டுமென்றும், இன்னும் பலமாக உத்கோஷத்துடன் பகிரங்கப்படுத்தவேணும் என்றும் சொல்வதற்குக் காரணம். "கவசத்தை அணிந்தவன் கவசத்தை எடுத்து வைத்தவனிடம் பெருமை பேசலாகாது" என்று கிறிஸ்துவ வேதத்தில் சொல்லியிருக்கும் உணர்ச்சியிலிருந்து திரு. சர்ச்சில் அவர்களின் அடக்கம் ஒருகால் பிறந்திருக்கவேண்டும்.

குறையச் சொல்லி வற்புறுத்துவதென்பது பிரத்யேகமான ஆங்கிலச் சொற்போக்கு. பிரதம மந்திரி அவர்கள் அதில் நிபுணர் என்று அவருடைய சொற்களும், எழுத்துக்களும் காட்டுகின்றன. ஒன்று நமக்கும் அவருக்

கும் தெரியும். நம் தேசம் மட்டும் மிஞ்சுவதற்காக நாம் யுத்தத்தில் இறங்கவில்லை. தனிப்பட்ட மனிதனுக்குச் சுதந்திரம், சொந்தப் பொறுப்பு, நியாயமான புழக்கம். உண்மைக்காக உழைப்பது முதலிய கொள்கைகள் பிரிடிஷ் ஜாதியாரை ஈடுபடுத்தியிருக்கின்றனவென்பதோடு, இன்று நம்முடைய பிரயத்தனங்களையும், நம்மைக் குறித்து ஐக்கிய ஸமஸ்தானங்களுக்குள்ள நல்லெண்ணத்தையும் ஈடுபடுத்தியிருக்கின்றன. அக்கொள்கைகளைச் சீரிட்டு முடிந்த மட்டும் எவ்வளவு ஜனங்களுக்கு அளிக்க முடியுமோ அவ்வளவு ஜனங்களுக்கும் அளிப்பதற்காகவே நாம் இச்சண்டையில் இறங்கியிருக்கிறோம்.

நாம் புஜபல பராக்கிமத்தால் நிரூபித்து இந்த லக்ஷியத்தை ஸித்தி செய்யவேண்டியிருக்கும் சந்தர்ப்பத்தில் ஒரு பிரதம மந்திரி அதை வெளியிட்டுச் சொல்வதென்றால் வீண் பெருமை பேசிக்கொள்வதாக ஆகும். ஆயினும், சம்பூர்ணமான வெற்றி மூலமாக இந்த லக்ஷியத்தை அடைந்து ஆசரித்துக்காட்டக்கூடிய வன்மையும் மனவுறுதியும் நம்மிடம் குறைவற்றிருக்கிறதென்பதை உலகமறிவது நலம்.

கதம்பம்.

1. "இந்த முழுப்பிரதேசத்தினுடைய முன்பு இருந்த சோபையையும் இப்பொழுது நாசமாக்கப்பட்டிருப்பதையும் கவனித்துப்பார்த்தால் ஹர் ஹிட்லர் நம்முடைய நகரங்களையும், நாட்டுப் புறங்களையும் கண்மூடித்தனமாய் குண்டுகளால் நாசம்செய்து பிரிடிஷாருடைய மனோதைரியத்தை நிலைகுலைத்துவிட முயற்சி செய்தானென்பதில் சந்தேகமே இல்லை." (மிஸ்டர் சர்ச்சில், காமன்ஸ் சபையில், நவம்பர்மீ 5உ).

2. "ஷேக்ஸ்பியரின் நாடகங்களில் காணப்படும் ராஜாக்களைப்போல் நம்முடைய சாதாரண மக்கள் நடந்துகொள்ளுகிறார்கள். நிச்சயமாக ஆங்கில பாஷையைப்பேசும் உலகத்தில் இந்த யுத்தம் முடிவடையும் காலத்தில் ராஜாக்கள் போல் நடந்துகொண்ட பொது மக்களைப்பற்றி ஸ்தோத்திரம் செய்து எழுத ஒரு கவி உண்டாகுவார். ஒரு புதிய ஷேக்ஸ்பியர் டன்கர்க் சம்பந்தமாய் ஒரு நாடகத்தை எழுதுவார்." (நியூ யார்க்கிலிருந்து டெரிதி தாம்ஸன், அக்டோபர்மீ 30உ).

3. "ஈஸ்ட் எண்டு" பாகத்திலுள்ளவர்கள் இம்மாதிரி குண்டு வீச்சுக்கு ஒருபொழுதும் பயப்படமாட்டார்கள்." (லண்டனிலுள்ள ஒரு இந்திய கூலியாள், அக்டோபர்மீ 26உ).

4. "இது இரண்டு தேசிய ராஜாங்கவர்க்கத்தார்களுக்குள் நடக்கும் நாய்ச் சண்டை அல்ல. இது ஒன்றுக்கொன்று ஒவ்வாத வழிபாடுகளுக்குள் சண்டை." (யார்க்கின் பிரதம குரு டெம்பிள் என்பவர் ஒரு ஒலிபரப்பில் சொன்னது, அக்டோபர்மீ 27ௗ).

5. "எதிராளி என்னை நோக்கிக் குத்துவதற்காக கையை ஓங்கியபொழுது தான், என்னை பாதுகார்த்துக்கொண்டேன். நான் ஒரு கெட்ட காரியமும் செய்யவில்லை. வலுச் சண்டைக்கும் போகவில்லை. சர்ச்சிலும் அவரைச் சேர்ந்தவர்களும் இந்தச் சண்டையை உண்டுபண்ணிவிட்டார்கள்." (பெர்லினில் ஹிட்லர் பேசியது, நவம்பர்மீ 8ௗ).

6. "இந்த நாட்டில் சதாகாலமும் யுத்த உதவிக்கு எதிர் முறையாக பிரசாரம் இடைவிடாமல் நடந்துகொண்டுவருகிறது. அம்மாதிரி பிரசாரம் நகரங்களிலும், கிராமங்களிலும், எல்லாவிடங்களிலும் நடைபெறுகிறது. இதை பங்கப்படுத்தவேண்டியது அவசியம். அதேமாதிரி பங்கப்படுத்தப்பட்டுவருகிறது என்பதில் எனக்கு சந்தோஷம். இந்த பிரசாரக் கமிட்டியாருக்கு என் சந்தோஷத்தை அறிவிக்கிறேன்." (கனம் ஆர்தர் ஹோப், மெட்ராஸ் கவர்னர், சென்னையில் பேசியது, நவம்பர்மீ 9ௗ).

7. "வெளிநாடுகளிலிருக்கும் ஜனங்கள் கொஞ்ச காலத்திற்குமுன்னால் நம்முடைய எதிர்கால நிலையைப்பற்றி ரொம்பவும் சாதாரணமான நம்பிக்கை கொண்டிருந்தார்கள். இப்பொழுது பிரிடன் நிச்சயமாய் ஜயமடையுமென்று தீர்மானிக்கிறார்கள்." (லண்டனில் மிஸ்டர் வின்ஸ்டன் சர்ச்சில் பேசியது, நவம்பர்மீ 9ௗ).

8. "ஜெர்மனியும், இதாலியும் நன்றாய் தோற்கடிக்கப்பட்டு நாஸிகளிடம் இருந்து ஏற்பட்ட பீதியானது உலகத்திலிருந்து ஒழிக்கப்பட்டபொழுதுதான் இந்த யுத்தம் முடிவடையும்." (கனம் ஆர்தர் ஹோப், மெட்ராஸ் கவர்னர் கடப்பாவில் பேசியது, நவம்பர்மீ 5ௗ).

9. "கிரீஸ் ஜனங்களுடைய மேன்மையான எதிர்ப்பு ஒருபுறம். ஜனநாயக ஆக்ஷியில் மகாசூரனை மிஸ்டர் பிராங்லின் ரூஸ்வெல்டின்பேரில் இருந்த தங்களுடைய பூர்ண நம்பிக்கைக்கு அநுகுணமாக அமெரிக்கா ஜனங்கள் அவரை மறுபடியும் தேர்ந்தெடுத்தது மற்றொன்று. (ஸர் ஆர்க்கிபால்ட் ஸின்க்ளேர், ஷெப்பீல்டு, நவம்பர்மீ 6ௗ).

10. "நமது மன்னரோடு ஒரேமனதாய் ஒத்துழைக்க சாதகமானதும், எல்லா மனிதர்களுக்கும், ஸ்திரீகளுக்கும் பொதுவானதுமான, ஸ்வதந்திரம், சகோதர பாவம், சாந்தகுணம், சமாதானமாகிய இந்த நோக்கங்கள் மேலோங்குவதற்காகத் தான் நாம் இந்த யுத்தத்தில் ஜயமடையவேண்டும்." (ஸர் ஆர்க்கிபால்ட் ஸின்க்ளேர், ஷெப்பீல்ட், நவம்பர்மீ 6ௗ).

11. "உலகத்திற்கு செழிப்பும், சமாதானமும் உண்டாவதற்கு சாதகமான ஜனங்களின் பொறுப்பாக்ஷியும், மனிதர்களுக்குள் ஆழ்ந்த சகோதரபாவமும் அமையும்படி கொடுமை செய்கிறவனை எதிர்த்து தேசங்களின் ஸ்வதந்திரத்தை நிலைநாட்ட பிரிடன் முயற்சி செய்கிறது." (லண்டன் லார்ட் மேயர் கொடுத்த விருந்தில் சர்ச்சில் பேசியது, நவம்பர்ீ 9உ).

12. "உலகமானது மறுபடியும் நவீனமுறையில் அடிமைத்தனத்தையாவது அல்லது ஸ்திரமான அடக்குமுறையையாவது, அல்லது நவீனமுறையில் மான்யங்களை அநுபவிக்கிறவர்களாகவாவது, அல்லது நவீன சக்ரவர்த்திகளின் ஆளுகைக்குட்பட்டாவது, அல்லது சிலர் சேர்ந்து ஆளுகை செய்யும் துரைத்தனத்தையாவது அடையும் என்று நான் நம்பவில்லை. அவர்கள் ஆளுகைக்குள்ளிருக்கும் ஜனங்களே கலகம் செய்ய ஆரம்பிப்பார்கள்." (பிரஸிடெண்ட் ரூஸ்வெல்ட், சமாதான நாள் கொண்டாட்ட தினத்தன்று பேசியது, நவம்பர்ீ 11உ).

13. "இந்தப் பயத்தை நாம் எவரும் பேச்சுகளால் எதிர்க்கப்போவதில்லை. அதைச் செய்கையில்தான் காண்பிக்கவேண்டும். நாம் சொல்லுவதைக்காட்டிலும் நாம் செய்கையில் காண்பிப்பதுதான் நமக்கு கௌரவம்." (தளகர்த்தர் பிரான்க் நாக்ஸ், சமாதான நாள் கொண்டாட்ட தினத்தன்று பேசியது, நவம்பர்ீ 11உ).

14. "அவருடைய கொள்கை நிலைகுலைந்த காலத்திலும் தன் முழுமனதுடன் அவர் சண்டை செய்ததுதான் மிஸ்டர் சேம்பர்லினுடைய பெருமையை வெளியிடுகிறது." (டெயிலி எக்ஸ்ப்ரஸ்).

அனுபந்தம் III.

ஜெர்மன்-இதாலிய ஒலிபரப்புப் பொய்கள்.

A—ஆங்கிலத்தில் ஒலிபரப்பு.

29—10—40.

ஏஜாக்ஸ் என்ற பிரிடிஷ் சப்பலானது, சமீபத்தில் ஏற்பட்ட சண்டைக்குப் பிறகு, வேண்டிய ஆகாரப் பொருள்களையும், யுத்தத் தளவாடங்களையும் அலெக்ஸாண்டிரியாவிலிருந்து எடுத்துக்கொண்டு பழுது பார்த்துக்கொள்வதற்காக முக்கியமான கப்பல் கட்டுத் துறை ஒன்றுக்குப் போயிருப்பதாக ஜெர்மனி ஒலி பரப்பியிருக்கிறது. இதாலிய நாசகாரிகளால் ஏஜாக்ஸ் முழுகடிக்கப்பட்டதாக ஜெர்மானியரும் இதாலியரும் சொல்லிக்கொண்டது இதிலிருந்து பொய்யென்று வெளியாய்விட்டது.

பிரிடிஷ் சாம்ராஜ்யம் தோல்வியடைந்தால்தான் சிறிய நாடுகளுக்கு அமைதியும், சாச்வதமும் உண்டாகும் என்று இதாலி சொல்லுகிறது. போலண்டார்கள், ஸெக்கியர்கள், பெல்ஜியர்கள், நார்வேக்காரர்கள், டேன்தேசத்தார், ஆல்பானியர்கள்—இவர்கள் இதற்குச் சரியான பதிலைச்சொந்த அனுபவத்திலிருந்து கொடுப்பார்கள். ஜெர்மனியாலும், இதாலியாலும் பிடிபட்டதிலிருந்து, இவர்களுக்கு அடிமைகளுக்கு ஏற்பட்ட அமைதியைத் தவிர வேறொரு அமைதியும் கிடையாது. மரணகாலத்துக்குப் பின்பட்டு புதைகுழியில் ஏற்படும் சாச்வத நிலையைத்தவிர வேறு சாச்வதமும் இவர்களுக்குக்கிடையாது.

பிரெஸ்லா நிலயத்தைத்தவிர ஜெர்மனியிலுள்ள மற்ற ரேடியோ நிலயங்களெல்லாம் இரவு 8¼-மணிக்கு நிறுத்திவிடவேண்டுமென்று உத்தரவு பிறந்திருக்கிறது. இதற்குக் காரணம் பிரிடிஷ் விமானங்கள்தான். இரவில் ஜெர்மனிக்குள் பறந்துபோகும் பிரிடிஷ் விமானங்களுக்கு இந்த ரேடியோ நிலயங்களின் ஒலிபரப்புகள் பெரிய நகரங்களுக்குச் செல்ல வழிகாட்டிகளாக உபயோகப்படுகின்றன. பிரெஸ்லாவானது ஸைலீஷ்யாவின் தலை நகர்: 18 ம் நூற்றாண்டிலேயே ஜெர்மனி ஆக்ரமித்த இடம். இந்நகரம் ஜெர்மனியின் தென்கிழக்குக் கோடியில் வெகுதூரத்தில் இருப்பதால் இங்கிருக்கும் ரேடியோ நிலயம் ஒன்றுதான் இதுவரையில் பிரிடிஷ் விமானிகள் போய்ச் சேராத இடமாயிருக்கிறது. ஆகவே இந்த நிலயம்மட்டும் இரவில் திறந்துவைக்கப்பட்டிருக்கிறது. பாக்கி நகரங்களில் 8¼-மணிக்கே ரேடியோக்கள் மூடப்படுவதால் அங்கிருக்கும் நகரவாசிகளுக்கு ரேடியோவினால் ஏற்படும் வேடிக்கை, வினோதப் பொழுதுபோக்கில்லாமல் போயிற்று. இதிலிருந்து பிரிடிஷ் விமானங்கள் எவ்வளவுதூரம் எவ்வளவு நகரங்களுக்குப்போய், குறி தவறாது எதிர்க்கின்றனவென்பது வெளிப்படும்.

31—10—40.

வேறு போர்முனைகளில் கஷ்டங்கள் ஏற்பட்டுவிட்டதால், பிரிடன் இப்பொழுது முட்டாள்தனமாக மத்தியதரைக்கடலில் சண்டையை ஆரம்பித்திருப்பதாக ஜெர்மன் (ஹா-ஹா-பிரபு) ரேடியோ சொல்லுகிறது. இது உண்மையைத் தலைகீழாக மாற்றிய பேச்சாகும். ராணுவ நிலயங்கள் வேண்டுமென்று அக்டோபர் 28-ம் தேதி, பின் இரவு 3-மணிக்கு இதாலி கிரீஸைக்கேட்டு, காலை 6-மணிக்குள் பதில் வரவேண்டுமென்றது. எந்த நிலயங்கள் வேண்டுமென்று கேட்டதற்கு இதாலிய மந்திரிக்கு அவைகள் எவையென்று குறிப்பிட முடியவில்லை. இதற்குள்ளாக அதாவது காலை 5-மணிக்கு இதாலிய துருப்புகள் கிரீஸுக்குள் பிரவேசித்து எதிர்க்க ஆரம்பித்துவிட்டன. இது இதாலியின் மூடத்தனமே ஒழிய பிரிடிஷ் மூடத்தனமல்ல. ஜெர்மன் ஒலிபரப்பில் வேறு போர்முனைகளில் கஷ்டங்களேற்பட்டிருப்பதாகச் சொல்லுவதெல்லாம் எதிரிகள் இங்கிலாந்தைப் படையெடுக்க முடியாத கஷ்டமும், ஹிட்லர் கெஞ்சிக் கூத்தாடி, தாவாங்கட்டையைப் பிடித்தும் புது நேயர்கள் கிடைக்காத கஷ்டமும்தான். இதுவரையில் கிரீஸ் யுத்தத்தில் இதாலி முன்னேறாததற்கு இதாலி சொல்லிக்கொள்ளும்

காரணங்கள் வேடிக்கையாய்த்தானிருக்கின்றன. ஒன்று, ரஸ்தாக்களில் சேறு இருக்கிறதாம்; இரண்டு, கிரேக்கியர்கள் தங்கள் கக்ஷியில் சேர யோசனைசெய்ய காலம் கொடுப்பதற்காக, வேண்டுமென்றே இதாலியர்கள் மெள்ள முன்னேறுகிருர்களாம்; மூன்று, இதாலி யுத்தத்துக்குத் தயாராயில்லையாம்.

1—11—40

மத்தியதரைக் கடற் பாதை அடைபட்டுவிட்டதால் கிரீஸுக்கு இப்பொழுது இறக்குமதி தடைபட்டுவிட்டதென்று ஜெர்மனி ஒலி பரப்புகிறது. இவ்விதம் தடுக்க இதாலியக் கடற்படையால் முடியாது. மேற்கு மத்தியதரைக் கடல் வாயிலாகிய ஜிப்ரால்டரை பிரிடன் திறந்துவைத்திருக்கிறது. இந்தக்கடலின் மத்திய பாகத்தில் இதாலியர்கள் வம்பு சற்றிருந்தாலும் யுத்தக் கப்பல்கள் துணையைக்கொண்டு, வியாபாரக் கப்பல்கள் சில போய்க்கொண்டுதானிருக்கின்றன. ஸூயஸ் கால்வாயும், செங்கடலும் பிரிடிஷ் ஆதீனத்திலிருப்பதிலிருந்து மத்திய தரைக்கடலின் கீழ் பாகம் நிர்ப்பயமாய்விட்டது.

இதாலிக்குக் கடற் சண்டையில் இதுவரையில் ஜயமொன்றும் ஏற்படாத அவமானத்தை மறைப்பதற்காக, இதாலி ஒலிபரப்பு இன்று 'போலண்டில் சண்டை துவக்கியதிலிருந்து இதுவரையில் பிரிடிஷ் கப்பற்படை சும்மாயிருப்பதாகச்' சொல்லிக்கொள்ளுகிறது. அது உண்மையானல், இதாலியச் சண்டைக்கப்பல்களான பார்த்தலோமியோ காலியோனியும், பிரான்ஸிஸ்கோ நல்லோவும், இதாலிய நாசகாரிப்படையில் நாலில் ஒரு பங்கும் அழிந்துபோனது எப்படி?

3—11—40

ஆகாய எதிர்ப்பைத் தவிர வேறு ஏதாவது ஒரு விஷயத்தைப்பற்றி பிரிடிஷ் மக்கள் பேசுவதற்காக இதாலிய-கிரீக் யுத்தத்தை மிஸ்டர் சர்ச்சில் கிளப்பி விட்டிருப்பதாக ஜெர்மன் (ஹா-ஹா-பிரபு) ரேடியோ தெரிவிக்கிறது. இதுவும் ஒரு விந்தைதான்.

இந்த வாரத்தில் ஜெர்மன் விமானங்களுக்கு அதிக நஷ்டமில்லையென்றும், பிரிடிஷ் விமானங்கள் அதிக நஷ்டப்பட்டதென்றும், இதுவே இந்த வாரத்திய முக்கிய செய்தியென்றும் ஜொமனி ஒலிபரப்பியிருக்கிறது. ஆனல் நவம்பர் 2, நிசி இரவுவரையில் எடுத்த கணக்குப்படி ஜெர்மனிக்கு 87 விமானங்களும் இங்கிலாந்துக்கு 27 விமானங்களும் நஷ்டம். நஷ்டப்பட்ட ஜெர்மன் விமானங்களில் 30 இரவில் சுட்டுத் தள்ளப்பட்டன. நஷ்டப்பட்ட பிரிடிஷ் விமானங்களில் 16 விமானங்களிலிருந்த விமானிகள் பத்திரமாய் இருக்கிருர்கள்.

B—ஆசியா பாஷைகளில் ஒலிபரப்பு.

30—10—40

யுனைடெட் ஸ்டேட்ஸ் யுத்தத்திலிறங்கினல் இக்காலத்துக்கு வேண்டிய பழகிய துருப்புக்களை அமெரிக்கா ஐரோப்பாவுக்கனுப்ப முடியாதென்றும், எம்பிரஸ்-ஆப்-பிரிடன் கப்பல் மூழ்கடிக்கப்பட்டதிலிருந்து இது வெளிப்படுகிற தென்றும் அமெரிக்காவின் தூதரான மிஸ்டர் ஜோஸப் கென்னடி சொல்லியதாக ஜெர்மனி ஒலிபரப்பியிருக்கிறது. அவர் அப்படி ஒன்றும் சொல்லவில்லை. யுத்தத்தில் அமெரிக்கா சேர்ந்தால் தற்காப்புக்கு யுத்த சாமான்களை அமெரிக்காவில் நிறுத்திக்கொள்ள நேரிடுமென்றும், அதிலிருந்து பிரிடனுக்கனுப்பக்கூடிய யுத்த தளவாடங்கள் குறைந்துவிடுமென்றும், பிரிடனுக்கு விமானங்கள் தேவையே யொழிய, சைன்யங்கள் தேவையில்லையென்றும் அவர் சொன்னர்.

1—11—40.

ஜெர்மன் விமானங்களால் இங்கிலாந்தில் தொழிற்சாலைகள் பழுதாகவில்லை. இதற்கு விரோதமாக, தொழிற்சாலைகளில் பல பழுதுபட்டுவிட்டதாக ஒலிபரப்பப் படுகிறது. இங்கிலாந்திலுள்ள தொழிற்சாலைகளில் பாதி வேலையை நிறுத்தி விட்டதாக ரஷியக்கப்பல் தலைவன் ஒருவன் பத்திரிகையொன்றில் எழுதியிருப்ப தாக சாக்ஷி கொடுக்கப்பட்டிருக்கிறது. கப்பல் தலைவனுக்குப் பெயர் கிடையாது. பத்திரிகைக்கும் பெயர் கிடையாது. ஆனல் இதற்கு விரோதமாக ரெட் ஸ்டார் என்ற ரஷ்ய பத்திரிகை அக்டோபர் 18-ல் 'லண்டன் மகா நகரத்தின் பலமே பலம். விமான எதிர்ப்பால் தடைபடாது. அந்த நகரத்திலுள்ள கைத்தொழில் கள் வழக்கம்போல் நடந்துகொண்டிருக்கின்றன' என்று சொல்லியிருக்கிறது.

2—11—40.

"சட்ட மறுப்பு இயக்கத்தை இந்தியாவில், பிரிடிஷ் கவர்ன்மெண்டு நசுக்கி விட முயற்சி செய்வார்களென்று ஏற்கனவே சொன்னபடி இப்பொழுது ஜவஹர்லால் நேருவைக் கைது செய்துவிட்டார்கள் பார்த்தீர்களா! இப்பொழுது நாங்கள் எதிர்பார்த்தது உங்களுக்குப் பிரத்தியக்ஷமாய் ருஜுவாய்விட்டதா?" வென்றும், காரணம் குறிக்கப்படாதும், முன்னெச்சரிக்கையின்றியும் எவருடைய ஆஸ்தியையும் கவர்ன்மெண்டு சுவாதீனப்படுத்திக்கொள்ள 1932-ல் இந்தியா கவர்ன்மெண்டு உத்தரவு பிறப்பித்ததாயும், 1932-ம் வருஷத்து சட்ட மறுப்பு இயக்கத்தில் அநேக இந்திய தேசியத் தலைவர்கள் ஜெயிலில் உயிரிழந்ததாகவும் ஜெர்மனி ஒலிபரப்புகிறது. ஜவஹர்லால் விஷயமாக பிரமாதமான ஜோஸ்யம் சொல்லிவிட்டதாம். 1932-ம் வருஷத்தில் நடந்ததாகச் சொல்லும் செய்தி களெல்லாம் முழுப்பொய்.

3—11—40.

ஜெர்மனியில் போட்ட நாலுவருஷ திட்டத்தின் பயனாகவும், விமானப்படை வெற்றியாலும், எல்லா விதத்திலும் சுபிக்ஷமும், முன்னேற்றமும் ஜெர்மனிக்கு ஏற்பட்டிருக்கிறதாகப் பெரிய புராணம் ஒன்றை இன்று ஜெர்மன் ரேடியோ வாசித்தது. ஆனால், ஜெர்மனியில் பீரங்கிகளிருக்கின்றனவே ஒழிய, ஜனங்களுக்குப் புசிக்க வெண்ணெய் கிடையாது. உணவு சாமான்கள் அளந்து திட்டப்படி வினியோகம் செய்யப்படுகின்றன. 1940 ஜூன் மாதத்தில் ஜெர்மன் சர்க்கார் வாங்கிய கடன் 56,360,000,000 மார்க்குகள். ஒரு மாதத்துக்குள் சுமார் 3,000,000,000 மார்க்குகள் கூடி அடுத்த ஜூலையில் 59,160,000,000 மார்க்குகளுக்கு ஏறிவிட்டது. சென்ற 1914-18-யுத்தத்திலும் இதே மாதிரி கடன் அதிகப்பட்டு ஜெர்மனி உட்கார்ந்தது. மேலே கொடுத்திருப்பது நீடித்தகால வரம்புள்ள கடன்கள். குறுகிய காலவரைக்கடன்களை ஜெர்மானியர்கள் கணக்கில் காட்டாது மறைக்கிறார்கள்.

புதுக்கோட்டை ஸமஸ்தான யுத்த அறிக்கை நிலயத்தின் பிரஸங்க நிகழ்ச்சி முறை.

பிரஸங்கம் XIX.

1940—				மணி.
நவம்பர் 16,	சனிக்கிழமை ...	டவுன் ஹால் ...	மாலை	6.30
17,	ஞாயிற்றுக்கிழமை.	திருக்கோகர்ணம் ...	,,	5.30
		பெருங்களூர் ...	,,	5.30
18,	திங்கட்கிழமை ...	காலேஜ் (B) தமிழ் ...	காலை	10.25
		ராணி பெண்பாடசாலை ...	,,	10.25
		ஒடையாளிப்பட்டி ...	மாலை	5.30
19,	செவ்வாய்க்கிழமை.	காலேஜ் (A) ஆங்கிலம் ...	காலை	10.25
20,	புதன்கிழமை ...	காரையூர் ...	மாலை	5.30
		விராலிமலை ...	,,	5.30
21,	வியாழக்கிழமை ...	கோனுபட்டு ...	,,	5.30
		அரிமளம் ...	,,	5.30
		சேரி பள்ளிக்கூடம் ...	,,	5 30
22,	வெள்ளிக்கிழமை.	C.S.M. பள்ளிக்கூடம் ...	காலை	10.00
		அன்னவாசல் ...	மாலை	5.30
		விராச்சிலை ...	,,	5.30

பிரஸங்கம் XX.

23,	சனிக்கிழமை ...	டவுன் ஹால் ...	மாலை	6.30
24,	ஞாயிற்றுக்கிழமை.	ராசியமங்கலம் ...	காலை	9.45
		திருவப்பூர் ...	மாலை	5.30
		புதுக்கோட்டை டவுன் முஸ்லீம் சங்கம்.	,,	5.00
25,	திங்கட்கிழமை ...	காலேஜ் (B) தமிழ் ...	காலை	10.25
		ராணி பெண்பாடசாலை ...	,,	10.25
		வேந்தம்பட்டி ...	மாலை	5.30
26,	செவ்வாய்க்கிழமை.	காலேஜ் (A) ஆங்கிலம் ...	காலை	10.25
		வேங்கடக்குளம் ...	மாலை	5.30
		கீழாநிலை ...	,,	5.30
		ராயவரம் ...	,,	5.30
27,	புதன்கிழமை ...	திருமயம் ...	,,	5.30
28,	வியாழக்கிழமை ...	நச்சாந்துபட்டி ...	,,	5.30
		ராமச்சந்திரபுரம் ...	,,	5.30
29,	வெள்ளிக்கிழமை...	C.S.M. பள்ளிக்கூடம் ...	காலை	10.00

1940-ம் வருஷ

டிஸம்பர்மீ 6, 7, 8 தேதிகளில்

புதுக்கோட்டை டவுனில்

ஸ்டேட் யுத்த நிதிக்காக

நடைபெறும் 'உற்சவத்தை

அவச்யம் வந்து பாருங்கள்.

போஷகர் :—மஹா-ா-ா-ஸ்ரீ மன்னர் அவர்கள்.

தீபங்களின் காக்ஷி

❖

விளையாட்டுகள்

❖

பாட்டுகள்

❖

மாந்தரீக வித்தை

❖

பக்கக் காக்ஷிகள்

❖

கிரிக்கட்

டிக்கெட்டுகள் சொல்ப விலைக்கு யுத்த நிதிக்காக ஏற்படுத்தப்பட்டிருக்கும் கமிட்டியாரிட மிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

(ா-தர்பாரவர்கள் ஆதரவின் கீழ்)

Sri Brihadamba State Press, Pudukkottai. 4,400—16-11-40.